உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம



# பிள்ளையமுதம்

அரியாலையூர் விஸ்வகுலத்திலகர்

நுண்கலைச் செல்வர்

அமரர் வல்லிபுரம் தம்பிப்பிள்ளை

ஞாபகார்த்த வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06-11-2004

# சமர்ப்பணம்

தமது வாழ்க்கையின் ஆரம்பத்தில்
சொல்லொணாத் துன்பங்களை அநுபவித்து
எதிர் நீச்சலிட்டுச் சகல வழிகளிலும்
வாழ்க்கையைச் சீரும், சிறப்புமாக அமைத்து,
சிற்பக்கலை வல்லுநராய், தொழில்
நுட்பவிற்பன்னராய், மனித நேயம் படைத்தவராய்,
இறைபக்தராய், ஜீவகாருண்ணியராய்
பூரண வாழ்வு வாழ்ந்து, இறைபதமடைந்த
வல்லிபுரம் தம்பிப்பிள்ளை நினைவாக மலரும்

**பிள்ளையமுதம்**

மலரை

ஞானவைரவப் பெருமான்
பாதாரவிந்தங்களுக்குப்
பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்
அரியாலை
06.07.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/200/849.

உ

சிவமயம்.

# பிள்ளையமுதம்



அரியாலையூர் விஸ்வகுலத்திலகர்

**நுண்கலைச் செல்வர்**

அமரர்

## வல்லிபுரம் தம்பிப்பிள்ளை

அவர்களின்


**ஞாபகார்த்த வெளியீடு**

**06 - 11 - 2004**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

302.101

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தோற்றம்**
**21.10.1921**

**மறைவு**
**07.10.2004**

அமரர்

# வல்லிபுரம் தம்பிப்பிள்ளை

**திதி நிர்ணய வெண்பா**

சீர்நிறை தாரணத்தில் செய்யும் புரட்டாதி
பார்நேர் நவமித் திதிதனிலே – சீராரும்
நற்றம்பிப் பிள்ளை இறைபாதம் நாடினார்
உற்றமண் வாழ்வைத் துறந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

திருவும் கல்வியும் சீருந்தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

## திருஞானசம்பந்தர்

பண் : நட்டபாடை தாளம் : ரூபகம்

இராகம் : கம்பீரநாட்டை

அருநெறி யமறைவல்ல முனியகன் பொய்கை யலர்மேய
பெருநெறி யபிர மாபுரமேவிய பெம்மா னிவன்றன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம் பந்தன்உரை செய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தல்எளிதாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் : வியாழக்குறிஞ்சி தாளம் : ஆதி

இராகம் : சக்கரவாகம்

அவ்வினைக் கிவ்வினையா மென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பது முந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெம்மைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பானீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரே.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசர்

பண் : திருக்குறுந்தொகை தாளம் : ஆதி

இராகம் : மாயாமாளவகௌளை

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்நெறி காட்டுமே.

பண் :திருத்தாண்டகம்

ஓசை ஒலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி.

## சுந்தரர்

பண் : நட்டராகம் தாளம் : ரூபகம்

இராகம் : பந்துவராளி

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனாக உண்பலிக் குழல்வானே
காடுநின் இடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

பண் : நட்டராகம் தாளம் : ரூபகம்

இராகம் : பந்துவராளி

இமையோர் நாயகனே இறைவாவென் இடர்த்துணையே
கமையார் கருணையினாய் கருமாமுகில் போல்மிடற்றாய்
உமையோர் கூறுடையாய் உருவேதிருக் காளத்தியுள்
அமைவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்
## மாணிக்கவாசகர்

நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடாகத்தே நின்றுருகத் தந்தருள்எம் உடையானே.

## திருவிசைப்பா
## கருவூர்த்தேவர்

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
பட்டொளி தருதிருநீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்றுபொற் குழல்திருச்சடையும்
திவன மாளிகை சூழ்தரு தில்லையுள்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல்மெழுகு ஒக்கின்றதே.

## திருப்பல்லாண்டு
## சேந்தனார்

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும்கு ழாம்பெருக
விழவொலி விண்ணள வுஞ்சென்று
விம்மிமிகு திருவாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி யாளாய்
மணம்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடிஎம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராணம்
## சேக்கிழார்

சீராரும் சதுர்மறையும் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியும் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலாம் ஈடேற
ஏராரு மணிமன்றுள் எடுத்ததிரு வடிபோற்றி.

## திருப்புகழ்
## அருணகிரிநாதர்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
எந்தனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருட்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே.

## கந்தரநுபூதி
## அருணகிரிநாதர்

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## வாழ்த்து

வான்முகில் வாழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

**தொகுத்தவர் : பண்ணிசைமணி**
**கலாபூஷணம் : கலாவித்தகர் வ. பரமசாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேல் வணக்கம்

### திருப்பரங்குன்றம்

சீர்த்தியாய்த் துதிகள் பாடித் திருவடிக்(கு) அலர்கள் தூவி
ஆர்த்தியாய் வழிபா டாற்றும் அன்பரின் இதயக் கோவில்
மூர்த்தியாய் விளங்கும் எங்கள் முதிர்பரங் குன்றின் வாழ்வாம்
கார்த்திகே யன்கை வேலைக் காண்பதே யெமக்கு வேலை.

### திருச்சீரலைவாய்

முறுவலிற் புரமெரித்த முக்கணன் தனக்கும் கும்பக்
குறுமுனி தனக்கும் போத குருவெனும் அரிய பேறு
பெருமொரு சிறியன் தெய்வப் பிடிமகிழ் கணவன் செந்தூர்
அறுமுகன் கரத்து வேலை அடுப்பதே யெமக்கு வேலை.

### திரு ஆவினன்குடி

மாதவன் மகிழ்ந்(து) அளித்த மடந்தையர் இருபால் மேவ
மேதகு மயிலின் மேல்ஓர் வெற்பினில் உதய மான
ஆதவன் எனவே போற்ற ஆவினன் குடியில் வாழும்
நாதன்செவ் வேளின் வேலை நாடுவ(து) எமக்கு வேலை.

### பழநி

திண்ணனார் சுவைத்(து) அளித்த தீங்சுவைக் கறிசு வைத்த
அண்ணனார் அணைத்துக் கண்ணே! அப்பனே! நீயே நேய
வண்ணமாம் பழம்என்று ஓத மகிழ்ந்துதென் பழநி வந்த
விண்ணவன் கரத்து வேலை விளம்புவ(து) எமக்கு வேலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருஏரகம்

சென்னி ஆறும் தணிந்த சிவபரஞ் சுடர்க்கு வேதம்
சொன்ன ஆசிரிய னென்று தொல்லுல கனைத்தும் போற்றப்,
பொன்னிசூழ் ஏரகத்துப் பொருப்பினிற் கோவில் கொண்ட
பன்னிரு கையன் வேலைப் பணிவதே எமக்கு வேலை.

### குன்றுதோறாடல்

கொன்றைசேர் சடைகள் ஆடக் கொடியிடை உமையாள் காண
மன்றிலே ஆடல் கொண்ட மகதேவன் வியந்து வாழ்த்தக்
குன்றுதோ றாடல் காட்டும் குமரவேள் மலர்க்க ரத்து
வென்றிசேர் சக்தி வேலை வேண்டுவ(து) எமக்கு வேலை

### பழமுதிர்ச்சோலை

புவனம்ஓர் மூன்றும் வாழப் புராரிதன் நுதற்கண் நோக்கில்
அவிர்சுடர் ஒளியாய்த் தோன்றி, அறுமுகத் தேவாய், அன்பர்
பவபயம் ஒழித்துக் காக்கப் பழமுதிர் சோலை, மேவும்
சிவசுப்பிர மண்யன் வேலைச் சேவிப்ப(து) எமக்கு வேலை.

### கதிர்காமம்

மடைஇல் மனத்து வாழ்வாய், வானவர் வணங்குந் தேவாய்க்,
குடிமுழு(து) அடிமைகொண்டு என்குறை களைந்(து) ஆளும்
கோவா
கடலுல(கு) அனைத்தும் போற்றக் கதிர்காம வெற்பின் மேவும்
அடிகளின் கரத்து வேலை, அர்ச்சிப்ப(து) எமக்கு வேலை

### போரூர்

ஒருரும் பேரும் இல்லான் உறவோடு பகையும் இல்லான்
ஆரூரன் தூதன் ஆனான், அவன்மகன் முருகன் என்பான்
போரூரிற் கோவில் கொண்டான் புகல்அடைந் தாரைக்காப்பான்
சீருரும் இவன்கை வேலைச் சிந்திப்ப(து) எமக்கு வேலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தணிகை

பண்டாரப் பையன் என்பார், பரிந்(து) அவன் மணந்து கொண்ட
பெண்டாட்டி இருவர் என்பார், பேசும்மெய்த் தெய்வம் என்பார்
கொண்டாடத் தணிகை வெற்பிற் கோவில்கொண் டுள்ளான்
என்பார்
தண்டாமல் அவன்கை வேலைத் தரிசிப்ப(து) எமக்கு வேலை.

## சென்னிமலை

விருப்பமும் வெறுப்பும் இல்லா முனிவர் தேவர்
திருப்பதம் வணங்கி வாழ்த்தச், செருக்களத்(து) அசுரன் நெஞ்சப்
பொருப்பினைப் பிளந்து, வஞ்சப் பொருப்பினைத் துளைத்த
சென்னிப்
பொருப்பனின் கரத்து வேலைப் போற்றுவ(து) எமக்கு வேலை

## குமர கோட்டம்

அப்பனே முருகா நீயே அரண்எனச் சரண்அடைந்தார்
தப்பெலாம் குறியா(து), ஈன்ற தாயெனப் பரிவு காட்டும்
பொய்ப்பிலான், குமர கோட்டப் புனிதன்என்(று) உலகம்
போற்றும்
ஒப்பிலான் கரத்து வேலை ஓதுவ(து) எமக்கு வேலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1973ஆம் ஆண்டு நடைபெற்ற அரியாலை நீர் நொச்சித் தாழ்வு ஸ்ரீசித்திவினாயகர் ஆலயத்தின் புதிய கோபுரக் குட முழுக்கின் போது பாடப்பெற்ற கீர்த்தனம்

இராகம் : கரகரப்பிரியா
தாளம் : ஆதி

**பல்லவி**

ஆனைமுகத் தோனே ஐங்கரனே அன்பர்
அல்லல் அகற்றிடும் ஐயனே அண்ணலே (ஆனை)

**அநுபல்லவி**

ஞால முதல்வனே நாயகனே நலம்
நல்கிடும் சித்தி விநாயகப் பெருமானே (ஆனை)

**சரணம்**

1. முத்துக் குமரனுக்கு மூத்தவனே நாதா
பக்தியுடன் பணிந்தேன் பரம தயாளா
எத்துய ரானாலும் வித்தகனே நீக்கி
சித்தம் மகிழ்திட நீஅருள் புரிவாயே (ஆனை)

2. கரிமுக வரதனே கணபதியே ஐயா
திரிபுரம் எரித்த எம்பெருமான் புதல்வா
அரியாலைப் பதியில் அமர்ந்துறை அண்ணலே
சிறியேன் சாமி சிந்தையில் வைத்திடும் (ஆனை)

இயற்றியவர் : இசையாசிரியர் வ. பரமசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆற்றங்கரை மணியோசை

**பல்லவி**

ஆற்றங் கரையின் மணியோசை
காற்றில் கலந்து வருகிறதே (ஆற்)

**அனுபல்லவி**

மாறறந் தரும்முருக நாமம் அங்கு
மாறி மாறி ஒலிக்கிறதே (ஆற்)

கந்த கோட்டம்தான் அமர்ந்து
கருணை செய்யும் வடிவேலன்
சொந்த மாக்க நற்பதியாம்
கொண்ட மானின் ஆறடைந்தான்
அந்த நாளில் கதிர்காமர் கனவில்
எந்த நாளும் எட்டெட்டாம் இலையில்
பந்த மாக அமுதும்தான் அளித்தார் (ஆற்)

பாசிப் பயறுடன் கன்னியாம் காய்கலந்து
பாங்காய் அமைத்த கறியோடும்
நேசித் திடும் அப் பூசகர்கள்
நேர்ந்து அளித் தநல் அமுதை
பூசித்தே பின்பெறு வோர்க்கு
திருவு அருளும் தான்பெருகும்
யாசிப் போர்க்கு எந் நாளும்
அமுதளித்து அன்ன கந்தனானாய் (ஆற்)

**ஆக்கம் : நா. வரதராசா,**
**பிரதிக் கல்விப்பணிப்பாளர்,**
**யாழ்ப்பாண கல்வி வலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் அவர்கள் விரும்பி இடைவிடாது ஆலயங்களில் பாடும் அற்புதத் திருப்புகழ்.

திருச்சிற்றம்பலம்

அதலசேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட - அவளோடன்
றதிரவீசி வாதாடும் விடையிலேறு வாராட
அருகு பூத வேதாள - மவையாட
மதுரவாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட - மதியாட
வனசமாமி யாராட நெடிய மாமனாராட
மயிலு மாடி நீயாடி - வரவேணும்
கதைவிடாத தோள்வீம னெதிர்கொள் வாளி யால் நீடு
கருதலார்கள் மாசேனை - பொடியாகக்
கதறுகாலி போய்மீள விஜயனேறு தேர்மீது
கனகவேத கோடூதி - அலை மோதும்
உததிமீதி லேசாயு முலகமூடு சீர்பாத
உவண மூர்த்தி மாமாயன் - மருகோனே
உதயதாம மார்பான ப்ரபுடதேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் - பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடர்ந்துவருங்
காலன் தனக்கொரு காலுமஞ் சேன்கடன் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமார னறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ ஞான வைரவர் துதிப்பாடல்

ஆதிமூல நாயகனே ஞான வைரவா - எங்கள்
அன்புருவே வாரும் ஐயா ஞான வைரவா
அரியாலைப் பதியமர்ந்து ஞான வைரவா
எங்களைக் காத்து அருள் புரிவாய் ஞானவைரவா

சோதியில் சோதியனே ஞான வைரவா
எங்கள் துன்பம் எல்லாம் போக்கிடையா ஞான வைரவா
எங்கள் குல தெய்வமல்லோ ஞான வைரவா
பக்கத்துணை வந்திடப்பா ஞான வைரவா

வேதத்தின் காவலனே ஞான வைரவா
மிளிர்யாக நாயகனே ஞான வைரவா
ஆகமத்தின் வடிவோனே ஞான வைரவா
அன்புநெறி தந்திடுவாய் ஞான வைரவா

நீலநிற முடையாய் ஞான வைரவா
நீலகண்டன் மகனே ஞான வைரவா
ஆதிமகா காளிமகிழ் ஞான வைரவா
அனைவரையும் காக்கின்ற ஞான வைரவா

தீராநோய் தீர்க்கின்ற ஞான வைரவா
தீவினைகள் போக்கிடுவாய் ஞான வைரவா
காக்கும் கடவுளே ஞான வைரவா - எங்களைக்
காத்துஅருள் புரிவாய் ஞான வைரவா

சரணம் சரணம் ஐயா ஞான வைரவா
பாதமலர் சரணம் ஐயா ஞான வைரவா

உன்பக்தன் தம்பிப்பிள்ளை அண்ணாவின் ஆத்மாவை
உன் பாதக் கமலத்தில் சேர்த்திடுவாய் ஞான வைரவா

ஓம் சாந்தி

**தொகுத்தவர் : வ. நடராசா**
**ஓய்வு பெற்ற ஆசிரியர், அரியாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை வாசகரும் அழகுக்கலை வல்லவரும் ஆலய நுண்கலைத்
திருப்பணிகளில் ஈடுபட்டு அயராது உழைத்து வருபவருமான
திருவாளர் **வ. தம்பிப்பிள்ளை** அவர்களுக்கு ஆலய தேவஸ்தானம்
அன்போடும் உவகையோடும் **நுண்கலைச் செல்வர்** என்ற
பட்டத்தை வழங்கிய அன்று வாசித்தளித்த

## பாராட்டுப் பாமாலை.

### வெண்பா

தும்பிக்கை யானேஇத் தொல்லரியா லைப்பதியார்
நம்பிக்கை கூப்பநலம் நல்குபவ - எம்பக்கல்
சேர்ந்த கலைக்குரிசில் சீரார்தம் பிப்பிள்ளை
காத்திடுதல் உன்றன் கடன்.

### விருத்தம்

தரத்தினில் உயர்ந்த கலைகள் பற்பலவாம்
தழைத்திடும் எந்த மதூரில்
வரத்தினை மிகவும் வழங்கிடு சித்தி
விநாயகர் ஆலயப் பணிகள்
சிரத்தையோ டென்றும் ஆற்றிடு குரிசில்
சிறப்புடன் உதித்த பேராள!
மரத்தினில் உயிரை இருத்தியே வடிவம்
மாண்புற இயற்றிட வல்லோய்!

இப்பிர பஞ்சம் எங்கணும் அருளை
ஈந்திடும் விநாயகர் கோயில்
ஒப்பற எழிலை அடைந்திட உன்றன்
உயர்கலை வண்ணமும் உம்பி
சுப்பிர மணியப் பெருந்தகை திறமும்
சுடர்விடக் கண்டனம் ஐய!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழு தும்நாம் நன்றியை உளத்தில்
இருத்தியே வாழ்த்துவம் ஏற்பாய்.

எண்ணியுன் திறங்கள் வியந்திடு கின்றோம்
ஏத்திநாம் போற்றிடு கின்றோம்
அண்ணலே தம்பிப் பிள்ளையாங் கலைஞ!
அழகிய கைவண்ணம் உடையாய்
மண்ணினில் என்றும் நின்புகழ் வாழ
மதித்துநாம் உன்றனுக் கின்று சப்பறத்
திருப்பணி நிறைவினைக் குறித்து
நுண்கலைச் செல்வர் என்றபட் டத்தை
வழங்கினோம் வாழிநீ வாழி!

அரியாலை
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்
யாழ்ப்பாணம்
24.08.2004

கவிதை ஆக்கம் : சொக்கன்

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா.
- பாரதி-

அமிழ்தின் இனியதடி பாப்பா - நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா
- பாரதி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் வல்லிபுரம் தம்பிப்பிள்ளை அவர்களின் வாழ்க்கைச் சரிதம்.

இந்துமா கடலின் மத்தியில் அழகொளிருகின்ற தீவாக விளங்குகின்ற ஈழ மணித் திருநாட்டின் வட பாகத்திலே பசுமை நிறைந்த நிலங்களும் பயன் தரு விருட்சங்களும் உயர்ந்த சைவப் பாரம்பரியத்தைக் கொண்ட ஆலயங்களும் இணையற்ற கல்விச்சாலைகளும் பேரறிவாளர்களையும் இசை வல்லுநர் களையும் கொண்டு விளங்குகின்ற மண்ணாக விளங்குவதுதான் யாழ்ப்பாண மண்.

இத்தகைய சிறப்புக்கள் யாவும் அமையப்பெற்ற யாழகத் தின் தென்மேற்குப் பாகத்தில் அமைந்திருப்பதுதான் காரை நகர் என்னும் சிவமணங்கமழும் சிறந்த நல்லூர். இவ்வாறான சிறப்புடன் மிளிருகின்ற காரைநகரில் சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்து வந்தவர்கள் வரிசையில் பொன்னர் - கதிராசி தம்பதி யினரும் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

காரைநகரில் பிறந்து வளர்ந்து வந்த பொன்னர் அவர்கள் சிறந்ததோர் கட்டடக் கலைஞராக விளங்கினார். குறிப்பாக ஆலயத் திருப்பணி வேலைகளை அழகுறச் செய்கின்ற பெரும் பணியினை இவர் மேற்கொண்டுவந்தார். இத்தகைய சிறந்த கலைஞனின் சேவையைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் யாழ்ப்பாண மண்ணின் அழகொளிரும் ஊராகவும் அறிஞர் களையும் கலைஞர்களையும் ஆற்றல் மிகுந்த உழைப்பாளர் களையும் கொண்ட அரியாலையூரைச் சேர்ந்த பெரியோர்கள் ஆலயங்களின் திருப்பணி வேலைகளின் நிமிர்த்தம் இங்கு பொன்னரை அழைத்து வந்து கலைவளம் கொழிக்கும் கலைமகள் வீதியில் குடியமர்த்தினர். இவருடன் இவரது மைத்துனர் இராமுப்பிள்ளை என்பவரும் இங்கு வந்து குடியேறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை மண்ணில் வாழ்ந்த பொன்னர் - கதிராசி தம்பதி யினருக்கு மகனாக மலர்ந்த வல்லிபுரம் என்பவர் சுழிபுரம் மண்ணில் வாழ்ந்த லட்சுமி என்பவரை இல்லறத் துணையாய் ஏற்று இனிய இல்லற வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

இல்லற வாழ்வினில் இனிதுடன் திகழ்ந்த வல்லிபுரம் - லட்சுமி தம்பதியினர் இணைந்த இனிய நல்வாழ்வின் பயனாய் தலைசிறந்த கட்டடக் கலைஞராக மிளிர்ந்த தம்பிப்பிள்ளை அவர்களையும் மணியம் மாஸ்ரர் என எல்லோராலும் அழைக் கப்படுகின்ற ஓய்வு பெற்ற போதனாசிரியர் கந்தையா அவர் களையும் ஓய்வு பெற்ற இசையாசிரியர் கலாபூஷணம் பரமசாமி அவர்களையும் அன்புயர் மக்களாய்ப் பெற்றனர்.

மூன்று முத்துக்களையும் பெற்றெடுத்த லட்சுமி அவர்கள் வல்லிபுரம் அவர்களை விட்டு நோய் வாய்ப்பட்டு இறைவனடி சேர்ந்தமையால் வல்லிபுரம் அவர்கள் நீர்வேலி என்னும் ஊரைச் சேர்ந்த பாக்கியம் என்பவரை மறுமணஞ் செய்து கொண்டார். இவர்களுக்கு அமரர் அன்னலட்சுமி தம்பித்துரை என்பவரும் சிறந்த சிற்பாசிரியராக விளங்கிய அமரர் தர்மலிங்கம் என்பவரும் இளைப்பாறிய ஆசிரியரான நடராசா என்பவரும் மக்களாய் மலர்ந்தனர்.

சிறிய வயதில் தாயினை இழந்த மூவரும் சிறிய தாயார் களான வசாவிளானைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்லாச்சி என்பவர்களினதும் நீர்வேலியில் வாழ்ந்த கனகசபை பார்வதி என்பவர்களினதும் அரவணைப்பில் வளர்ந்து வந்தனர்.

தந்தையாருடன் இணைந்து சிறு பராயத்தில் குடும்பச் சுமையை ஏற்றுக்கொண்ட தம்பிப்பிள்ளை அவர்கள் தனது பதினைந்தாவது வயதில் கட்டிட வேலையை மிகச் சிறப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் செய்துவந்தார். குறிப்பாக சிற்பவேலை, கட்டடங் களின் கூரை வேலை என்பனவற்றில் சிறந்த விற்பன்னராக விளங்கியதுடன் சப்பறம், தேர் போன்றவற்றின் உருவாக்கத் திற்கும் உறுதுணையாளராய் விளங்கினார்.

நல்லதோர் கலைஞனாகவும் மற்றவர்கள் மதிக்கும் பண்பா ளராகவும் விளங்கிய **தம்பிப்பிள்ளையவர்கள்** 1945ஆம் ஆண்டில் **தம்பிஐயா - பூரணம்** தம்பதிகளின் புத்திரியாகிய **மாரிமுத்து** என்பவரை மனம் நிறைந்த மனையாளாய் ஏற்றுக் கொண்டார்.

மாரிமுத்து என்பவரின் சோதரர்களாகிய துரையப்பா எனப் படும் கந்தையாவும் சின்னத்துரை எனப்படும் மயில்வாகனமும் கனடாவில் வாழும் தங்கம்மாவும் பூமா என அழைக்கப்படும் அமரர் வள்ளியம்மையும் அமரர் தம்பிப்பிள்ளையின் மைத்துனர், மைத்துனிமார்கள் ஆவர்.

நிறைந்த நல்வாழ்வில் இணைந்த **தம்பிப்பிள்ளையும் மாரிமுத்தும்** அன்பாகவும் பண்பாகவும் இவ்வுலகில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் இணைந்த இல்லற வாழ்வின் இனிய பேறாக நன்மக்களைப் பெற்று எல்லோரும் போற்றிட வாழ்ந்தனர்.

சிரேஷ்ட மகனாக **த.பஞ்சலிங்கம்** என்பவரைப் பெற்றெ டுத்தனர். சிறந்த கல்வியறிவாளராகத் திகழும் இவர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாள ராகவும் யாழ்ப்பாண கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாள ராகவும் சிறந்த சமூக சேவையாளராகவும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. த. பஞ்சலிங்கம் அவர்கள் வர்த்தலை விளான் தெல்லிப்பளையைச் சேர்ந்த செல்லத்துரை -பாக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதிகளின் புத்திரி கமலாதேவி என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களின் புதல்வர்களாக வரகுணன், ஹரிகரன், மதுரதன் ஆகியோர் மிளிர்கின்றனர்.

அடுத்த புதல்வியாக திருமதி நாகேஸ்வரி பேரம்பலம் என்ப வர் இம் மண்ணிலே மலர்ந்தார். இவர் மாவிட்டபுரத்தை சேர்ந்த கந்தையா சிதம்பரம் தம்பதிகளின் புதல்வன் செல்லத் தம்பி என அழைக்கப்படும் பேரம்பலத்தை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு இலண்டனில் வாழுகின்ற ரஜித்தா தவராசா என்பவரும், கபிலாஜினி, தனுஷா, துவாரகா ஆகியோ ரும் பிள்ளைகளாக பிறந்தனர். ரஜித்தா என்பவர் இலண்டனில் வாழும் தவராசா என்பவரை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு நந்தஹரி என்னும் புதல்வன் பிறந்துள்ளார்.

அடுத்த புதல்வனாக பாலசுப்பிரமணியம் என்பவர் இம் மண்ணிலே பிறந்தார். இவர் சுழிபுரத்தைச் சேர்ந்த துரையப்பா பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வி யோகம்மா என்பவரை திருமணம் புரிந்தார். இவர்களுக்கு தர்சிகா என்னும் புதல்வி பிறந்தார்.

நோர்வேயில் வாழுகின்ற தியாகலிங்கம் என்பவர் அமரர் தம்பிப்பிள்ளையின் நான்காவது புதல்வனாவார். இவர் அரியாலையைச் சேர்ந்த தம்பித்துரை அன்னலட்சுமி தம்பதிகளின் புதல்வி சந்திராவதி என்பவரை திருமணம் செய்து கொண்டார். இவர்கள் நிரோசன் என்பவரை புதல்வனாய் பெற்றனர்.

தம்பிப்பிள்ளை அவர்களின் ஐந்தாவது மகளாக சரஸ்வதி செல்வராசா அவர்கள் பிறந்தார். இவர் நீர்வேலியைச் சேர்ந்த குமாரவேலு சிவபாக்கியம் தம்பதிகளின் புத்திரனாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வராசா என்பவரை திருமணம் செய்து கொண்டார். இவர்களின் செல்வங்களாக சிவப்பிரியா, மகிழாஜினி, அகிலாஜினி, ஜனகன், கௌசிகன் ஆகியோர் இம்மண்தனில் மலர்ந்தனர். மருமகன் செல்வராசா அவர்கள் இளவயதிலேயே இறைவனடியை பற்றி அமரரானார்.

அமரர் அவர்களின் ஆறாவது மகளான கோகிலாதேவி என்பவர் பிறந்தார். இவர் அரியாலையைச் சேர்ந்த கனகசபை அன்னம்மா தம்பதிகளின் புத்திரனாகிய துரை என அழைக்கப் படும் சிவபாலசிங்கம் என்பவரைத் திருமணம் செய்துகொண் டார். இவர்களின் பிள்ளைகளாக ஜெயகாந், சந்திரகாந்த், கௌசிகா, சிவரங்கன், கௌதமி ஆகியோர் இப்புவியின் கண்ணே மலர்ந்தனர்.

நோர்வே நாட்டில் வாழுகின்ற யோகாதேவி என்பவர் அமரர் தம்பிப்பிள்ளை அவர்களின் ஏழாவது மகளாவார். இவர் வர்த்தலைவிளான் தெல்லிப்பளையைச் சேர்ந்த இராமசாமி நாகேஸ்வரி தம்பதிகளின் புத்திரனாகிய குணதாசன் என்ப வரைத் திருமணம் புரிந்தார். இவர்கள் கிரிஷாந்தி, பிரவீனா, ஜீவிகா ஆகியோர்களைப் பிள்ளைகளாகப் பெற்றெடுத்தனர்.

நோர்வே நாட்டில் வாழுகின்ற சோதிலிங்கம் என்பவர் அமரர் அவர்களின் எட்டாவது புதல்வன் ஆவார். இவர் சுழிபுரம் மண்ணில் வாழும் நமசிவாயம் பூமலட்சுமி தம்பதி களின் புதல்வியாகிய தவமலர் என்பவரைத் திருமணம் புரிந் தார். இவர்கள் கஜானன், டிலக்ஷன் ஆகியோர்களை பிள்ளை களாகப் பெற்றனர்.

கனடா நாட்டில் வாழுகின்ற மகாலிங்கம் என்பவர் அமரர் தம்பிப்பிள்ளை அவர்களின் ஒன்பதாவது கனிஷ்ட புத்திரன் ஆவார். இவர் ஏழாலையைச் சேர்ந்த சிவசம்பு தங்கபாக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதிகளின் புதல்வியாகிய புஸ்பராணியைத் திருமணம் செய் தார். இவர்கள் பிரியந்தி என்னும் பெண் மகவைப் பெற்றெடுத் தனர்.

அறிவும் ஆற்றலும் நிறைந்த பிள்ளைகளையும் அடக்கமும் பணிவும் கொண்ட மருமக்களையும் மற்றவர்களை மதிக்கின்ற மனப்பாங்கினைக் கொண்ட பேரமக்களையும் பூரிப்போடு அணைத்தெடுக்கக் காத்திருந்த பூட்டப்பிள்ளையையும் பெற்று வாழ்வினில் எவ்வித குறைகளுமின்றி அப்புவியிலே அமரர் தம்பிப்பிள்ளை அவர்கள் வாழ்ந்து வந்தார். வாழ்வின் ஒவ்வொரு நகர்வுகளிலும் இவர் படைத்த சாதனைகள் மெச்சக் கூடியவையாகவே இருந்தன.

அமரர் வல்லிபுரம் தம்பிப்பிள்ளை அவர்கள் தனது தந்தையாரைப் போல் தலைசிறந்ததோர் கட்டடக் கலைஞராக மிளிர்ந்தார். குறிப்பாக ஆலயங்களில் காணப்படுகின்ற சப்பறம், தேர் என்பன இவருடைய கலையம்சத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. இவருடைய கலைத் திறமையைப் பாராட்டி அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையினர் 1980ஆம் ஆண்டு இவருக்கு **நுண்கலைச் செல்வர்** என்னும் கௌரவப்பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர். மேலும் அரியாலை அபிவிருத்திச் சங்கமானது 2002ஆம் ஆண் டில் அரியாலையின் மூத்த பிரஜைகளில் ஒருவராக இவரைக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அமரர் தம்பிப்பிள்ளை அவர்கள் இப்பூமியிலே தான் வாழ்ந்த காலப்பகுதியில் ஆன்மீக ஈடுபாடு கொண்ட ஓர் அடி யவராக விளங்கினார். அரியாலை கலைமகள் வீதியில் அமர்ந்து அருளாட்சி புரிகின்ற ஞானவைரவப் பெருமானின் பேரருளைப் பெற்ற இவர் அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், அரியாலை பிரப்பன்குளம் மகாமாரி அம்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம், சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம், நயினை நாகபூசணி அம்மன் ஆலயம், திருநெல்வேலி முத்துமாரி அம்மன் ஆலயம், பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் ஆலயம், நல்லூர் கந்தசுவாமி கோயில், கதிர்காமக் கந்தன் ஆலயம் ஆகிய தெய்வ மணங் கமழும் ஆலயங்களின் மீது அதிக ஈடுபாடு உடையவராக விளங்கினார். மேலும் கடந்த ஐம்பது வருடங் களுக்கு மேலாக நல்லைக் கந்தன் ஆலய உற்சவத்தின் போது தினமும் கந்தரநுபூதியை ஓதுகின்ற பெரும்பேறினைப் பெற்ற வராக விளங்கினார். பஞ்ச புராணங்களை இசையுடன் ஓதுகின்ற வல்லமை பெற்றவராகவும் இவர் மிளிர்ந்தார்.

எமது சமய வரலாற்றில் கூறப்படுகின்ற நாயனார்களின் வழி நின்று ஏழைகளுக்கு இரங்குபவராகவும் வீட்டுக்கு வருகின்ற விருந்தினர்களை உபசரித்து உணவளிக்கின்ற மனப்பாங்கினை உடையவராகவும் மனிதர்கள் மட்டுமன்றி விலங்குகளுக்கும் அன்போடு உணவளிக்கும் மனப்பாங்கினைக் கொண்டவராக வும் அமரர் அவர்கள் விளங்கினார். மேலும் ஆலயங்களில் இடம்பெறும் பல்வேறு திருப்பணிகளுக்கு மனங்கோணாது உதவியளிக்கும் தன்மையுடையவராகவும் இவர் விளங்கினார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தோராம் ஆண்டு ஐப்பசி மாதம் இருபத்தோராம் (21.10.1921) திகதி இம்மண்ணில் பிறந்த தம்பிப்பிள்ளை அவர்கள் ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தைந்தாமாண்டு இல்லற வாழ்வினில் புகுந்து நற்புதல் வர்களைப் பெற்று சிறப்பாக வாழ்ந்து வந்தார். ஆயினும் விதியின் பலனால் 1978ஆம் ஆண்டு தம்பிப்பிள்ளை அவர் களின் இல்லறத் துணைவி மாரிமுத்து அவர்கள் கணவனையும் பாசமிகுந்த பிள்ளைகளையும் விட்டு இறைவன் அடியினைப் பற்றிச்சென்றார். தாயினை இழந்த பிள்ளைகளுக்குத் தாயாக வும், தந்தையாகவும் தானே மிளிர்ந்து நன்றாக வளர்த்து அவர்களுக்குரிய நல்ல வாழ்க்கைகளை அமைத்துக் கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரும் உலகமும் போற்ற அவர்கள் வாழவைத்த பெருமைக் குரியவராக அமரர் தம்பிப்பிள்ளை அவர்கள் விளங்கினார்.

அன்னாருடைய கோலமும் சீலமும் குணமும் என்றும் தெய்வீகத் தன்மை வாய்ந்தவையாகும். இவருடைய வதனம் எப்போதும் சிவப்பொலிவுடனேயே நமக்குக் காட்சி தரும். எப்பவோ முடிந்த காரியம் என்ற எமது ஞானியருடைய அருள் வாக்கிற்கு அமைய தம்பிப்பிள்ளை அவர்கள் இரண்டாயிரத்து நான்காமாண்டு ஐப்பசித் திங்கள் ஏழாம் நாள் **(07.10.2004)** இவ்வுலக வாழ்வினைத் துறந்து எல்லாம் வல்ல ஞான வைரவப் பெருமானுடைய பாதார விந்தங்களைப் பணிந்து சென்றார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**எழுத்தாக்கம் : ஐயாத்துரை குமரதாசன், ஆசிரியர்**
**யா /நாயன்மார்கட்டு, மகேஸ்வரி வித்தியாசாலை.**

Dear Mr. Panchalingam,

Education International is sorry to know about the sudden demise of your father.

Please accept the sympathy and condolences from the EI General Secretary and all of us from the EI Regional Office in Kuala Lumpur.

I am sure he will be dearly missed by you and other members of your family.

With best wishes.

Aloysias Mathews
Chief Co - ordinator
EI Asia Pacific Region



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்க அதிபரின் சிந்தையிலிருந்து

அமரர் வல்லிபுரம் தம்பிப்பிள்ளை அவர்கள் தமது தொடர் பரம்பரையின் வழியில் மரச் சிற்பக் கலையிலும், கட்டிடக் கலையிலும் வல்லுநராக 50 ஆண்டுகள் வரையும் சிறப்பாக செயலாற்றித் தமது 84ஆவது வயதில் இயற்கை எய்தியுள்ளார். சிற்பக் கலைஞர்கள் தமது சிற்பக் கலையை முதலில் ஆலயத் திருப்பணி வேலைகளில் தொடங்கி ஆலயங்களுக்கான தேர் வடிவமைத்தல், சுவாமிக்கான சப்பறம், மஞ்சம் மற்றும் பல்வேறுபட்ட வாகனங்கள் என்பவற்றை வடிவமைப்பதிலும், அவற்றைச் செய்வதிலும் தமது தொழில்நுட்பத் திறமை யையும், அனுபவத்தையும் புகுத்துபவர்கள். அரியாலை கிரா மத்தில் திரு. வல்லிபுரம் தம்பிப்பிள்ளை அவர்கள் தமது திறமையின் மூலம் அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தா னத்தின் புதிய சப்பறத்தை அமைத்தும், சப்பறத் தேர்த் திருவிழாக்களில் இவ்வாகனங்களை ஒழுங்குறச் செயல்படுத்தி யும் வந்த பெரியார் ஆவர்.

1980ஆம் ஆண்டு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சப்பறத்தைச் சிறப்புறச் செய்தமைக்காக இவருக்கு "நுண்கலைச் செல்வர்" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை எல்லோருக் கும் தெரிந்த ஒரு விடயமாகும். அவர் தனியாக மாத்திரமல்ல தமது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் ஆலயத் திருப்பணிகளுக்காக அர்ப்பணித்து இன்று அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், அரியாலை மகாமாரியம்மன் ஆலயத் திருப்பணி வேலைகளிலும், கோயில் கட்டிட, வாகன திருப் பணி வேலைகளிலும் அவர்கள் எந்தத் தரத்தில் இருந்தாலும் உரிமையுடனும், இறைபக்தியுடனும் ஈடுபட்டு வருவது கவனிக்கக்கூடிய ஒரு முக்கிய விடயம் ஆகும். கோயில் திருப் பணி வேலைகளில் மாத்திரமல்ல அரியாலைக் கிராமத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி முடிக்கப்பட்ட 90%இற்கு மேற்பட்ட வீடுகளை வடிவமைப்பதிலும், செயலாக்கத்திலும் காலஞ்சென்ற திரு.வல்லிபுரம் தம்பிப்பிள்ளை அவர்களும் முக்கிய பணி யாற்றியவராவர். இதனை அப்பிரதேசமக்கள் எளிதில் மறந்து விட முடியாது. கோயில் திருப்பணியோடு கோயில்களில் பாமாலை ஓதுவதிலும், பஞ்ச புராணங்களை இசையோடு பாடுவதிலும் ஆர்வம்மிக்கவர். இவரது சகோதரன் பாலசிங்கம் அவர்கள் சங்கீத ஞானம் மிக்க ஓர் ஆசிரியர் ஆவர். அவரிடம் இசை பயிலும் பலன் இன்றும் எம்மிடையே காணப் படுகின்றன.

அரியாலை ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தின் சிவனுக்கு ஓர் தேர் செய்யவேண்டுமென்ற அவாவில் தம்முடைய குடும்பத் தினர் பொருட் செலவில் ஸ்ரீசித்திவிநாயகப் பெருமானுக்கு நிகரான ஓர் சிறந்த தேரை உருவாக்கியவர். இத்தேர் உற்சவ காலத்தில் இழுக்கப்படும் பொழுது அமரர் தம்பிப்பிள்ளை அவர்களது ஞாபகம் எல்லோருடைய மனதிலும் ஏற்படுவதை நாம் காணலாம். இவர் 2002ஆம் ஆண்டு அரியாலை அபிவி ருத்திச் சங்கத்தினால் அரியாலையின் மூத்த பிரஜைகளுள் ஒருவராகக் கௌரவிக்கப்பட்டார். இவர் எனது தந்தையா ருடைய நீண்ட கால நண்பரும், இணை பிரியாதவரும் ஆவார். தமது 84 வயதில் காலமாகிய அமரர் வல்லிபுரம் தம்பிப் பிள்ளையினுடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானை வணங்கிநிற்கின்றேன். அவரு டைய மறைவினால் துயருறும் அவருடைய சுற்றத்தாருக்கும், பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவரி னால் உருவாக்கப்பட்ட இத்தெய்வப் பணி தொடர்ந்து அவர் களுடைய சந்ததியினர்களால் நிறைவேற்றப்படும் என எதிர் பார்க்கிறேன்.

**செ.பத்மநாதன்**
**அரசாங்க அதிபர்**
**யாழ் மாவட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி சு. மோகனதாஸ் அவர்களின் இரங்கல் செய்தி.

அமரர் வ. தம்பிப்பிள்ளை அவர்கள் சிவபதம் அடைந்த செய்தியைக் கேட்டு மிகவும் கவலை அடைந்தேன். நேரில் சென்று எனது அஞ்சலியைத் தெரிவித்துக்கொண்டேன்.

பனம்தோப்புகளும், தென்னந்தோப்புகளும் நெற்கழனி களும் கொண்ட இயற்கை வனப்புகளுடன் பட்டணச் சூழலையுடைய அரியாலை என்னும் பேரூரில் பல செல்வச் சிறப்புகளும் கலைச் சிறப்புகளும் கொண்ட குடிமக்கள் வாழ்கின்றனர். அவ்வூரில் சிற்பக்கலைச் சிறப்புடைய குடும்பத் தில் தோன்றிய அமரர். வ. தம்பிப்பிள்ளை அவர்களின் நினை வாக எழுதப்படும் நினைவு மலருக்கு எனது கருத்துக்களை வழங்கக் கடமைப்பட்டுள்ளேன். அந்த அடிப்படையில் அவரைப்பற்றிய சில குறிப்புக்ளை இங்கு தருகின்றேன்.

அமரர் தம்பிப்பிள்ளை அவர்களின் குடும்பத்தோடு எமக்கு மூன்று தலைமுறையினருக்கு மேலான தொடர்புகள் உண்டு. எனது பேரனார் அமரர் தம்பிப்பிள்ளையும் (அர்சுனன்) அமரரின் தந்தை அமரர் வல்லிபுரமும் இணைந்து ஆற்றிய கலைச் சேவையைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளேன். எனது தகப்பனாருடன் சேர்ந்து அமரர் தம்பிப்பிள்ளை அவர்கள் திரு விழாக் காலங்களில் திருமுறைகளை ஓதிய வண்ணம் கோவில் வீதிகளில் வலம் வந்த காட்சிகளை நான் கண்டிருக்கின்றேன். இவ்வாறாக இறைவனுக்குத் தொண்டாற்றுவதில் அமரர் மிக்க விருப்புடையவராக திகழ்ந்தார்.

அமரரின் மூத்த புதல்வன் திரு. பஞ்சலிங்கம் அவர்களுடன் சேர்ந்து பொதுச் சேவையிலும் கல்விப் பணியிலும் ஈடுபட்ட தன்மையினை இச்சந்தர்ப்பத்தில் எண்ணிப்பார்க்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலையில் அமைந்துள்ள திருக்கோவில்களின் சிறப்பு களுக்கு இவரும் இவரது வழிவந்தவர்களும் ஆற்றிவரும் சேவை போற்றுத லுக்குரியது.

அவர் சார்ந்த சிற்பக் கலைக்குத் தன்னை முழுமையாகவே அர்பணித்திருந்தார். இத்துறையில் நிபுணத்துவம் நிரம்பி யவராக விளங்கினார். பல்வேறு சந்தர்ப்பங்களில் பலராலும் அவரது கலைத்திறமை பாராட்டப்பட்டதை நான் அவதானித் திருக்கின்றேன்.

அவரும் அவரது குடும்பத்தினரும் மிகவும் நல்ல பண்பு களைக் கொண்டவர்களக விளங்குகின்றார்கள். அமரர் பேசு வதற்கு இனியவராகவும் எமது நலன்களையும் முன்னேற்றங் களையும் கண்டு மகிழ்பவராகவும் விளங்கினார். இதனால் ஒரு நல்ல குடும்ப நண்பனை இழந்துவிட்டேன் என்பதை உணர் கின்றேன்.

இன்றும் சிறப்பாக ஓடிவருகின்ற அரியாலை ஸ்ரீசித்தி விநாயகரின் சித்திரத் தேரை வடிவமைப்பதில் அவர் ஆற்றிய பங்கு, பணி போற்றுதற்குரியது. பொதுவாகவே கோவில் பணி களை அக்கறையுடனும் ஆர்வத்துடனும் சிறப்பாகவும் செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையுடன் வாழ்ந்த கலைஞரா வார்.

தமது அன்பு மனைவியை இழந்திருந்த நிலையிலும் தமது பிள்ளைகளை நல்லொழுக்கமுள்ளவர்களாகவும் உயர்கல்வி அறிவுடையவர்களாகவும் ஆக்கிய பெருமைக்குரியவர். சமூகத் துக்குத் தொண்டாற்றக் கூடிய விதத்திலும் தமது பிள்ளை களையும் சகோதரர்களையும் வளர்த்து வழிகாட்டிய அமரர் பல்வேறு செல்வங்களுடன் பேரப்பிள்ளைகளையும் கண்டு பழுத்த பழமாகச் சிவபதமடைந்துவிட்டார். அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!

**சு. மோகனதாஸ்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனுபூதிச் செல்வர் திரு. தம்பிப்பிள்ளை அவர்கள் நல்லைக் கந்தனின் திருவடித் தாமரைகளுடன் இணைந்து அமரத்துவம் அடைந்து விட்டார்.**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவனாரின் வாக்கிற்கு அமைய நல்லதொரு பண்பாளனாய், சிறந்த குடும்பத் தலைவராய், தலைசிறந்த சிற்பாசிரியனாய், சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த ஆத்மீகச் செல்வராய் எல்லாம் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து ஆயிரம் பிறை கண்டு திரு தம்பிப்பிள்ளை அவர்கள் அமரத் துவம் அடைந்துவிட்டார். சிற்பிகளை "அபர பிரமாக்கள்" எனச் சிற்ப நூல்கள் கூறுகின்றன. உள்ளத் தூய்மையுடனும் பக்தி உணர்வுடனும் உருவாக்கப்படும் சிற்பங்களிலே தெய்வீக ஒளி வீசும். மிக நுணுக்கமாகச் சிற்ப வேலைப்பாடுகளைச் செய்து சிறந்த சிற்பாசிரியர் என்ற பெயரினைத் திரு. தம்பிப்பிள்ளை அவர்கள் ஈட்டிக்கொண்டார்கள். ஒன்று இரண்டு பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதே வாழ்வில் பெரிய சாதனை என நினைக்கின்ற பெற்றோர்கள் வாழும் இக்காலத் திலே ஒன்பது பிள்ளைகளைப் பெற்றுச் சீரோடும் சிறப்போடும் அவர்களை வளர்த்து உருவாக்கிய பெருமைக்குரியவராக இவர் திகழ்ந்தார்.

நல்லைக் கந்தன் ஆலயத்தின் மகோற்சவ காலத்திலும் கந்தசஷ்டி விழாக் காலத்திலும் சுவாமி வெளிவீதி வரும் பொழுது சுவாமிக்குப் பின்னால் முருக மந்திரமாகிய கந்தரனு பூதிப் பாடல்களைப் படித்துக்கொண்டு வரும் வழமை பல ஆண்டு காலமாக நடைபெற்று வருகிறது. மகான் செல்லப்பா சுவாமிகள், தவமுனிவர், யோகர் சுவாமிகள் போன்றோர் தவம் செய்து கந்தவேட் பெருமானின் அருளினைப் பெற்ற நல்லைக் கந்தனின் தேரடியிலே இருந்து இந்தப் பஜனை ஆரம்பமாகும். பஜனைக்கு முன்பாகச் சாம்பிராணித் தூபம் பிடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நாவால் முருக நாமத்தை உச்சரித்தபடி திரு தம்பிப் பிள்ளை அவர்கள் அடியார்களில் ஒருவராக வருவார்கள். நல்லைக் கந்தனின் மேற்கு வீதியில் உள்ள விநாயகப் பெருமான் சந்நிதிக்கு முன்பாக அனுபூதிப் பஜனை வந்ததும் "உம்பர் தருத்தேனுமணிக் கசிவாகி" என்ற திருப்புகழைப் பக்திரசம் ததும்ப கண்களில் இருந்து ஆனந்த அருவி நீர் சொரிய அவர் பாடும் பொழுது அடியார்கள் அனைவரும் உள்ளம் உருகி நிற்பார்கள்.

"நல்லூரான் வீதி நடந்தாலே வினை தீரும்" என்ற முதுமொழிக்கேற்ப வீதியிலே முருக மந்திரத்தைப் பாடிப் பரவிப் பணிந்து வணங்கிய அமரர் தம்பிப்பிள்ளை அவர்கள் இந்த வருடம் மஞ்சத் திருவிழாவில் நடந்த பஜனையில் மாத்திரம் கலந்துகொண்டார். உடல் சுகயீனம் காரணமாகத் தொடர்ந்து கலந்துகொள்ள முடியாத நிலையில் அன்பர் அவர்கள் இருந்தார்கள். மகோற்சவம் நிறைவுற்று ஒரு மாத காலத்திற்குள்ளே அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார்கள். திரு. தம்பிப்பிள்ளை அவர்கள் வாழ்ந்துகாட்டிய வாழ்க்கை நெறியினை அவரது சந்ததியினரும் பின்பற்றி ஆத்மீகச் செல்வர் களாக வாழவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

"விதி யாரைத் தான் விட்டது?எப்பவோ முடிந்த காரியம்!
ஒரு பொல்லாப்பும் இல்லை! நாம் யாதும் அறியோம்!
முழுவதும் உண்மை!"

என்ற மகான் செல்லப்பா சுவாமிகளின் வாக்குகளே அனை வருக்கும் ஆறுதல் தரும் வாக்கியங்கள் ஆகும்.

அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய நாம் அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**சிவத்தமிழ் வித்தகர். சிவ. மகாலிங்கம்**
உதவிப் பணிப்பாளர்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
மாவட்ட அலுவலகம்
மாவட்டச் செயலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டில் செய்வதிலும் கலைவண்ணம் காட்டியவர்

1983ஆம் ஆண்டு எனக்குத் திருமணம் நடைபெற்றது. திருமணப் பரிசிலாக, நினைவாக நண்பர் பஞ்சலிங்கம் கட்டில் ஒன்றினை வழங்குகின்றார். அதன் பிணைப்புக்கள், இணைப் புக்கள் எல்லாம் வலிமை பொருந்தியவையாகவும் கலைநயம் மிகுந்ததாகவும் காணப்பட்டன. கூர்ந்து பார்த்து வியந்தேன். அக்கட்டில் இன்றும், 20 ஆண்டுகளுக்குப் பின்னரும் அதே பொலிவுடன் இருப்பதை எண்ணி வியந்து நிற்கின்றேன். எனது வியப்புக்குரிய கட்டிலைத் தமது மூத்த மகன் பஞ்சலிங்கத்தின் வேண்டுகையை ஏற்று ஆக்கியவர் அண்மையில் இயற்கை எய்திய வல்லிபுரம் தம்பிப்பிள்ளை அவர்கள்.

நண்பர் பஞ்சலிங்கத்துடனான தொடர்பு 30 ஆண்டுகளைக் கடந்தது. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இத்தொடர் புக்குக் காலாக அமைந்தது. அக்காலகட்டத்தில் இருந்து திரு. தம்பிப்பிள்ளை அவர்களை நன்கறிவேன். மலர்ந்த முகத்துடன் வரவேற்று விருந்தோம்புவதில் எப்போதும் முன்னிற்பார். முகம் சுருங்கியதையோ, முகத்தைச் சுருக்கியதையோ ஒரு நாளும் நான் காணவில்லை.

தமது குலத்தொழிலை, வீடுகள், கோவில்கள், கடைகள் முதலியவற்றுக்கான மரவேலையைக் கண்ணும் கருத்துமாகக் கற்றுக் கொண்டார். பாரம்பரியமாகக் கலைத்திறன் மிக்க அவ் வேலை அவருக்கு உயர்ந்த ஊதியத்தை அளித்தது. மக்கள் அவரது கலைத்திறன் மிக்க பணியினைக் கண்டு புகழாரம் சூட்டினர்.

தொழில் சிறந்தது. பொருளும் குவிந்தது. மணப்பருவம் எய்தினார். மாரிமுத்து என்ற மங்கை நல்லாளை வாழ்க்கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையாக்கினார். விருந்தோம்பும் குணமும் மற்றவருக்கு உதவும் பண்பும் கொண்ட வாழ்க்கைத் துணையின் ஒத்துழைப் புடன் தமது உடன்பிறப்புக்களுக்குக் கல்வி புகட்டினார். ஒருவர் தொழில்நுட்பக் கல்லூரியில் விரிவுரையாளரானார். மற்றவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே சங்கீத பூசணப்பட்டம் பெற்று ஆசிரியர் ஆனார். மற்றொருவரும் ஆசிரியரானார்.

இல்லறத்தை நல்லறமாக மேற்கொண்ட தம்பிப்பிள்ளை 9 குழந்தைகளுக்குத் தந்தையரானார். ஐவர் ஆண்கள்; நால்வர் பெண்கள். கடைசி மகன் 11 வயதை அடைந்த போது மனைவியை இழந்தார். தாயினும் நல்ல தலைவராக இருந்து பிள்ளைகளை வளர்த்தார்.

மூத்த மகன் பஞ்சலிங்கம். இவர் ஓர் அதிபர். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலர். பொதுச் செயலராகிய என்னுடன் இணைந்து சங்க உறுப்பினர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ் மாணாக்கரின் கல்வி மேம்பாட்டுக்காகவும் தோளோடு தோள்கொடுத்து உழைப்பவர். தமது தன்னலம் அற்ற பணியால் உயர்ந்து நிற்ப வர். தேசிய நிலையிலே பேசப்படுபவர். ஆசிரியர் சங்கத்துக் காக மட்டுமன்றிப் பல்வேறு சமூக அமைப்புகளிலும் உறுப்பி னராகிச் சமூகப் பணியாற்றுகின்றவர். இவரை எமது சங்கத் துக்கு, சமூகத்துக்கு அளித்த அமரருக்கு நன்றி கூறுகின்றேன்.

**த. மகாசிவம்,**
**பொதுச் செயலர்,**
**இ.த.ஆ. சங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்துமாரி அம்மன் அரவணைத்தானே

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்பது வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருமகனார் வாக்கு. மனிதனாகப் பிறந்தவன் எந்த வகையில் வாழ வேண்டும் என்பதற்கு இது வரைவிலக்கணமாக அமைந் துள்ளது. மனிதப் பிறவி எடுத்தல் என்பது கர்மவினைப் பயன்களை நீக்கி முத்தியின்பம் பெறுவதற்கு என்பர். கர்மவினைப் பயன்களை நீக்கி முத்தியின்பத்தோடு வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும். அவ்வாறு வாழ்பவர் இறைபதத்தை அடைவர் என்பர். அமரர் வல்லிபுரம் தம்பிப்பிள்ளை ஆச்சாரியார் அவர்கள் அந்த வகையில் வாழ்ந்தவர். அறப்பணிகள் புரிவதிலே தன்னை அர்ப்பணித்தவர். ஆலயங்களில் நடைபெறுட் திருப் பணிகளில் பெரும்பங்கு ஆற்றியவர்.

அமரர் தம்பிப்பிள்ளை அவர்கள் அன்னை முத்துமாரி அம்பாளிடம் மிக்க பக்தி கொண்டவர். அவர் இந்த ஆலயத் தில் நடைபெறுகின்ற பங்குனித் திங்கள் கடைக்குளிர்ச்சி, வைகாசிப் பொங்கல் ஆகிய தினங்களைத் தமது சகோதரர் களுடனும் மற்றும் சுற்றத்தவர்களுடனும் இணைந்து பக்திப் பரவத்தின் மண்டபங்களின் கொட்டகை வேலைகளைத் தமது சகோதரர் அமரர் வ. தர்மலிங்கத்துடன் இணைந்து திறம்படச் செய்துமுடித்துள்ளார். அன்னார் இந்த ஆலயத்திற்குச் செய்த சேவைகளை எம்மால் மறக்கவேமுடியாது.

அன்னார் எல்லோருடனும் அன்பாகப் பழகும் இயல்பி னராவார். கள்ளம் கபடமற்ற உள்ளம் கொண்டவர். மற்றயோர் மனம் செழிப்படையக் கூடியதாகத் தமது கருத்துக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயமாக முன்வைப்பதில் அவருக்கு நிகர் அவரேயாவார். அமரர் அவர்கள் முகம் பொருந்தி, இன்சொல் சொல்ல வல்ல வராயின் அது மனதாரக் கொடுத்தலைக் காட்டிலும் நன்று என்னும் கூற்றுக்கு இலக்கணம் வகுத்தவராகக் காணப் பட்டார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தம்பிப்பிள்ளை அவர்களின் மறைவு அவரின் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர் களுக்கும் அன்னார் ஒட்டி உறவாடிய ஆலயங்களுக்கும் பேரிழப்பாகும். அன்னார் வாழ்ந்து காட்டிய சீரிய வாழ்கை அவர் பிள்ளைகளுக்கு உறுதுணையாக அமைய அன்னை முத்துமாரி அம்பாள் துணை நிற்பாள்.

**சி. திருபாகரக் குருக்கள்**
**முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்**
**திருநெல்வேலி**

**தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.**
**- திருக்குறள், 236.**

**மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை**
**என்னோற்றான் கொல்எனும் சொல்.**
**- திருக்குறள், 70.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணியோசை கேட்டு மகிழ்ந்தார்.

அரியாலைப் பதியில் பிறந்து, வாழ்ந்து நிறைவுடன் அமரத் துவம் அடைந்துள்ள உயர்திரு. வல்லிபுரம் தம்பிப்பிள்ளை அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் இவ்வாலயத்திற் கும் நெருங்கிய தொடர்புண்டு. எமது ஆலயத்தின் வடக்கு வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் தம்பையா மாரிமுத்துவை அவர் தமது வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டார். சுழிபுரம் பதியில் அமைந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் பத்திரகாளியின்மேல் அமரர் அவர்கள் மிகவும் அக்கறையும் உள்ளார்ந்த பக்தியும் கொண்டவராக தமது வாழ்க்கையின் இறுதிக் காலம்வரை வாழ்ந்தார்.

தமது மூத்த மகன் பிறந்த போது அன்னைக்கு வடக்குப் பக்கமாக மணிக்கோபுரத்தைக் கட்டி அதில் மணியை ஏற்றி வைத்து அதன் ஓசைகேட்டு மகிழ்ந்தார். இடையில் சிறிது காலத்திற்கு ஆலயத்தின் திருப்பணி வேலைகள் காரணமாகவும் மணியில் ஏற்பட்ட சிறிய சீரின்மை காரணமாகவும் மணியைப் பாவிக்க முடியாமல் இருந்தமை அவரது மனத்தை மிகவும் பாதித்திருந்தது. பின்பு ஆலயத்தின் திருப்பணி வேலைகள் நடைபெற்றபோது குறிப்பிட்டளவு தொகைப் பணத்தை அன்பளிப்புச் செய்து மணிக்கோபுரத்தையும், மணி யையும் புதுமெருகு பெறச்செய்து அதன் ஓசையைக் கேட்டு மகிழ்ந் தார். ஆண்டு தோறும் பங்குனி மாதத்தில் நடைபெறும் அன்னையின் விளக்கு வைத்தல், வேள்வி, எட்டாம் மடை போன்ற நிகழ்ச்சிகளில் தமது குடும்பத்ினரோடு தவறாது கலந்து கொள்வார். அவ்வப்போது ஆலயத் திருப்பணி தொடர் பாகத் தமது அனுபவ ஆலோசனைகளை வழங்குவார்.

அன்னாரின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய அன்னையை வேண்டி நிற்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை,**
**சுழிபுரம் பத்திரகாளியம்மன்,**
**தேவஸ்தானம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சத்திதுணை

## உயர்ந்த பண்பாளர்

விஸ்வ பிரம்ம ஸ்ரீ வல்லிபுரம் தம்பிப்பிள்ளை அவர்கள் இறைபதம் எய்தியது அரியாலை பிரப்பங்குள மகாமாரி அம்மன் ஆலய பரிபாலன சபையினரை மட்டுமல்ல அரியாலையின் சகல மக்களையும் மிகுந்த கவலைக்குள்ளாக்கியது.

அன்னாரும் அன்னாரது குடும்பத்தவர்களும் அரியாலை பிரப்பங்குள மகாமாரி அம்மன் ஆலயத்துக்கு செய்த, செய்து கொண்டிருக்கும் திருத்தொண்டுகள் ஆலய வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தது. அம்பாளுக்குச் சித்திரத் தேர் செய்யப் பட வேண்டும் என்பதிலும் அதனை இலங்கையின் புகழ் பெற்ற ஸ்தபதி விஸ்வ பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கம் அவர்கள் கைவண்ணத்தில் நிறைவேற்றப்படவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடன் உழைத்தார்.

அவருடைய தனிப்பட்ட குணாதிசயங்களைப்பற்றிக் கூறுவதானால் அவர் எம் தந்தையின் பாலிய நண்பர்; எம் எல்லோரையும் விட வயதில் முதியவராய் இருந்தபோதும் எம்முடனோ அல்லது பரிபாலனசபை உறுப்பினருடனோ ஆலயம் சம்பந்தமாகக் கலந்துரையாடும் பொழுது மிகுந்த பண்புடனும் கண்ணியத்துடனுமே உரையாடுவார். இது அவரிடம் நாங்கள் கற்கவேண்டிய பாடம்.

அவருடைய இழப்பு அரியாலைக் கிராமத்துக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு. அவரின் பிரிவால் துன்புற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய பரிபாலன சபையின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மகாமாரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

**ந.குகதாசன்**
**தலைவர், பரிபாலனசபை,**
**அரியாலை பிரப்பங்குளம் ம.அ.ஆலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஸ்வகர்ம திலகர்

எம்முடன் அன்பாக இருந்தவர்கள் எமக்கு மிகவேண்டிய வர்கள் எம்மை விட்டுப் பிரிந்தால் எமக்கு ஏற்படும் மனோ நிலையினையே துக்க நிலையென்று தெரிந்தும் பழகிய காரணத்தினாலேயே நாம் பிரிவுத் துன்பத்தினை ஏற்றுக் கொள்ள முடியாத போது அழுது அரற்றி எமது துக்கத்தினை நீக்க முயல்கின்றோம். இத்தகைய நிலைக்கு எம்மை இட்டுச் சென்றவர்தான் அமரர் விஸ்வகர்ம திலகர் வல்லிபுரம் தம்பிப் பிள்ளை அவர்கள்.

சிறு பராயத்திலிருந்து ஆன்மீக வாழ்வுக்கான அடித்தளத் தினை அவர் வாழ்ந்த ஊரும், உறவும், அயலும், சூழலும் அமைத்துக்கொடுத்தன. செய்யும் தொழிலே தெய்வம் எனப் போற்றித் தன் தொழில்நுட்பத்தினாலும் கலையம்சங் களினாலும் தொழிலில் தேர்ச்சியும் அனுபவமும் பெற்றுச் சிறந்து விளங்கினார். தொழில் புரிதலுடன் நின்றுவிடாது கெஞ்சிரா கொண்டு பல ஆலயங்களிலும் கூட்டுப் பிரார்த் தனை செய்து ஆன்ம திருப்தி கொண்டவர். குறிப்பாக நல்லூர் முருகன் மீது அளவு கடந்த பக்திகொண்டு உற்சவகாலங்களில் கந்தரனுபூதி பஜனை செய்வதில் முன் நிற்பதை யாவரும் அறிவர். இப்படியான ஆன்மீக வாழ்வினாலும் கூட்டுப் பிரார்த்தனை செய்ததின் பயனாகவும் நல்லூர் முருகனின் அருளாசியினாலும் அவர்பெற்ற நவரத்தினங்களும் ஒளி விட்டுப் பிரகாசிக்கின்றன.

இத்தகைய பெரியார் எமது ஸ்ரீஞானவைரவர் ஆலயத் துடன் நெருங்கிய தொடர்புகொண்டவர். பலமுறை எமது ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனை செய்து மனநிறைவு கொண்டவர். எமது ஆலய மண்டபத் திருப்பணியைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரர் தருமலிங்கம் செய்தபோது அவருடன் இணைந்து ஆலய மண்டபத்தினைச் சிறப்புற அமைய அரும்பணியாற்றியவர்.

"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு"

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்கத் தன் கடமை நிறைவெய்திய மனநிறைவோடு இறைபதம் எய்தினார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**க. சண்முகலிங்கம்**
**தலைவர்**
**பரிபாலன சபை**
**அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோயில்**

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

- திருக்குறள், 41.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

- திருக்குறள், 50.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலையூருக்குப் பேரிழப்பு

அமரர் வல்லிபுரம் தம்பிப்பிள்ளை அவர்கள் சிவபதம் அடைந்த அன்று நான் கொழும்பில் இருந்தபோதும் அவர் அமரத்துவம் அடைந்த அன்றே அத்துயரச் செய்தி எனக்குக் கிட்டியது. கவலை அடைந்தேன். அன்று இரவு அமரரது மூத்த புதல்வன் திரு. த. பஞ்சலிங்கம் அவர்களுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தேன்.

அமரர் வ. தம்பிப்பிள்ளை அவர்கள் அரியாலையில் புகழ் பூத்த சிற்பாசாரியர் குடும்பத்தைச் சேர்ந்தவர். அமரர் அவர் களும் அவரது சகோதரர்களும் அவரது வழித்தோன்றல்களும் யாழ்ப்பாணத்திலேயே சரித்திர முக்கியத்துவம் பெற்ற எமது அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ் தானத்திற்கு வழங்கிய சேவை போற்றுதற்குரியது.

அமரர் வ. தம்பிப்பிள்ளை அவர்கள் எமது தேவஸ்தான நிர்வாகசபை உறுப்பினராகப் பல வருடங்கள் சேவை புரிந்த வர். தனது உடல் நலக் குறைவின் நிமித்தம் கடந்த வருடம் நிர்வாகசபை உறுப்பினர் பொறுப்பில் இருந்து விலகினார். நிர்வாகசபை உறுப்பினராக இருந்து அவர் ஆற்றிய சிறப்பான பணிகளை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூருகின்றேன். அவர் வழங்கிய ஆலோசனைகளுக்கும் ஒத்துழைப்புக்கும் தேவஸ் தான நிர்வாகத்தின் சார்பிலும் தேவஸ்தான அடியார்கள் சார்பிலும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

அமரர் அவர்கள் தாம் கொண்ட கலையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவராக விளங்கினார். 18 வருடங்களுக்குப் பின்னர் 1999ஆம் ஆண்டு நடைபெற்ற தேவஸ்தான மகாகும்பாபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷேகத்தை யொட்டி தேவஸ்தான தோற்றத்தில் ஏற்படுத்தப் பெற்ற சில மாற்றங்கள் சம்பந்தமாக அவர் வழங்கிய சீரிய ஆலோசனை கள் அவரது தொழில்நுட்பத் தேர்ச்சிக்கு எடுத்துக் காட்டுகளாக அமைந்தன.

கலையம்சம் நிரம்பிய எமது தேவஸ்தான விநாயகரின் சித்தி ரத்தேரை இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன் வடிவமைப்பதில் அவரின் நிபுணத்துவமும் செயற்றிறனும் பெரும் பங்கை வகித்தன என நான் கேள்விப்பட்டுள்ளேன். அத்துடன் அவரது இளைய சகோதரன் அமரர் வ. தர்மலிங்கம் அவர்கள் முன் னின்று அண்மையில் வடிவமைத்த தேவஸ்தான சிவன் சித்திரத் தேரை நிர்மாணிப்பதில் அமரர் வ. தம்பிப்பிள்ளை ஆற்றிய பங்கை நான் நன்கறிவேன். இவ்வருடம் (2004) தேவஸ் தானத்தில் நிர்மாணிக்கப்பெற்ற சப்பறம் சம்பந்தமாகவும் சப்ப றத்தை நிர்மாணிப்பதில் ஈடுபட்டிருந்த அவரது வழித்தோன் றல்களுக்கு அவரின் ஆலோசனை பெரிதும் உதவியது என்பத னையும் நான் கண்கூடாகக் கண்டேன். இத்தகைய ஓர் நிபுணத் துவம் நிறைந்த சிற்பாசாரியாரை எமது அரியாலையூர் இழந் துள்ளது. இவ் வெற்றிடம் அரிதில் நிரப்பக் கூடியது ஒன்றல்ல.

ஒரு தெய்வீகக் கலைஞருக்கு இருக்கவேண்டிய பண்புகளில் மிக முக்கியமானவை பக்தி உணர்வும் துறைசார்ந்த சாஸ்திர அறிவும் ஆகும். இவை இரண்டும் அமரரிடம் நிறைந்து காணப்பட்டன. இறைவனைத் துதிப்பதிலும், போற்றுவதிலும் இறைவனுக்குத் தொண்டாற்றுவதிலும் அமரர் சிறப்புப் பெற்றவராகத் திகழ்ந்தார்.

தமது துறைசார் நிபுணத்துவத்தினாலும், செயற்றிறனினா லும் அமரர் அவர்கள் துறைசார்ந்தவர்களையும் ஏனையோரை யும் தன்பால் ஈர்ந்திருந்தார். பலரினதும் பாராட்டுக்களைப் பெற்றிருந்தார். அத்துடன் எமது ஊரின் ஓர் மூத்த பிரஜையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிக்கப்பெற்று சகலரினது அன்புக்கும் அபிமானத்திற்கும் பாத்திரமாகத் திகழ்ந்தார். அன்னாரின் மறைவு எமது ஊருக்கு, குறிப்பாக தேவஸ்தான சபைகளுக்குப் பாரிய இழப்பாகும்.

நேரில் சமுகம் கொடுத்து இறுதிக்கிரியைகளில் பங்குபற்றி எனது அஞ்சலியைச் செலுத்த முடியவில்லையே என்று நான் பெரிதும் கவலைப்பட்டேன். ஆயினும் நான் கொழும்பு செல்ல முன்பு அவரின் இல்லம் சென்று நலன் விசாரித்துச் சென்றிருந்தேன் என்பதை நினைவு கூரும் பொழுது எமது மனம் சற்று ஆறுதல் அடைகின்றது.

அமரரை இழந்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அமரர் வ. தம்பிப்பிள்ளை அவர்களின் ஆத்மா சாந்தியடைய வினைதீர்க்கும் ஸ்ரீசித்திவிநாயகரின் பேரருளை வேண்டி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அரியாலை,**
**தீர்நொச்சித்தாழ்வு**
**ஸ்ரீ சித்திவிநாயகர்**
**தேவஸ்தானம்,**
**அரியாலை,**
**19.10.2004**

S.T. **பத்மநாதன்,**
**தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளந்தாளர் அஞ்சலி

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் வைகாசி விசாக வளந்துப் பொங்கற் பெரியார்களுள் எனது நினைவில் என்றென்றும் நிலைத்திருக்கும் ஒருவர் அமரர் வல்லிபுரம் தம்பிப்பிள்ளை அண்ணார். பங்குனி மாத அம்மன் குளிர்த்தி, வைகாசி விசாக வளந்துப் பொங்கல் ஆகிய காலங்களிலேயே நாம் அதிகமாகச் சந்தித்த போதிலும் என்னுடன் அவருடைய உரையாடல் வைத்திலிங்கம் பொன்னையா பெரியையா முதலான வளந்துப் பெரியவர்களைப் பற்றியதாகவும் அவர்கள் காலத்தில் அவர்கள் அம்மன் குளிர்த்தியிலும் வளந்துப் பொங்கல் மேலும் சொரிந்து கொண்டிருந்த பயபக்தியையும் வியந்து பேசுவார். அத்தகைய பயபக்தி இக்காலத்தில் அருகியுள்ளதே என்றும் வருத்தமுறுவார்.

வளந்து பிரியாதிருக்க வேண்டுமென்ற பயத்தால் ஸ்ரீ முத்துமாரியம்மன் மேல் வளந்துச் சமூகம் சொரிந்த பக்தியையும் விசுவாசத்தையும் பாராட்டி மகிழ்வார். அவர் கண்களில் நீர் மலரும். அன்று மண்பானை அம்மன் மேல் எத்தகைய பக்குவமான பக்தியை வைத்திருக்க வேண்டுமோ அத்தகைய பக்தியைப் பொங்கற் பானை மேலும் வைத்துத் "தாயே காத்தருள்" என்று அம்மனிடம் எம்மை அர்ப்பணித்து, பயத்தால் உண்டான பக்தியுடன் இருந்த காலமது. இன்று பொங்கலுண்டு, பக்தியுண்டு என்று கூறுவார். எனது தந்தையார் வைத்திலிங்கம் காசிப்பிள்ளை அவர்கள் அகவல் பாடும் போது அவர் கண்ணீர் கசிந்து மல்குவதைக் குறிப்பிடுவார்.

நாயக வைத்தியர் வளந்தின் வரலாற்றையும் அதன் உரிமைக்காரர்களையும் பங்காளர்களையும் தொகுத்துக் குறு நூலாக அடியேன் வெளியிட்ட போது எனது முயற்சியைப் பாராட்டி என்னை ஊக்குவித்தார்.

இத்தகைய பெரியார்கள் வகித்த இடம் வெற்றிடமாகி வருகிறதே. முத்துமாரியம்மனின் திருமகனார் காத்தவராயக் கடவுளும் காத்தருள்க.

**காசிப்பிள்ளை மாணிக்கவாசகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் வ. தம்பிப்பிள்ளையின் இறுதிக் கிரியைகளின் போது இடம் பெற்ற அஞ்சலி உரைகளிலிருந்து.

இன்று பெரியதோர் ஆலமரம் சரிந்துள்ளது. அந்த ஆலமரத்தின் விழுதுகள் புகழ்பரப்பி நிற்கின்றன. அமரர் காட்டிய பாதை நேரானதும் தூய்மையானதும் ஆகும். அமரரின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் வாழும் வீதிக்குத் 'தம்பிப்பிள்ளை அவனியூ' என நாமம் சூட்ட வேண்டும் என விரும்புகிறேன்.

திரு.சரா. புவனேஸ்வரன்
தலைவர்

❁❁❁❁❁

அமரரின் திடீர் மறைவு அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட பெருந்திரளான மக்களைப் பார்க்கும் போது அவர் எவ்வளவு சீரும் சிறப்புமாக வாழ்ந்திருக்கிறார் என்பது தெரிகிறது. அவரது திடீர் மறைவு ஆலயத் தொண்டுக்கும் சிற்பக் கலைக்கும் கட்டடக் கலைக்கும் பேரிழப்பாகும்.

திரு. தி. கிருஸ்ணகுமார்
(தலைவர். யாழ் .வலயம்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்)

❁❁❁❁❁

அமரர் வாழ்ந்த வாழ்க்கை சமுதாயத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். அயல் சமூகத்தினரோடு அவர் வைத்திருந்த தொடர்பு என்றுமே நிலைத்திருக்கக் கூடியவை. அவரது தாராள மனப்பான்மையையும் ஒட்டி உறவாடும் தன்மை யையும் நான் இவ்விடத்தில் நினைவுபடுத்துகிறேன்.

திரு. சி. சிவதாசன்
(சமாதான நீதவான்)
அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதன் இறந்த பின்புதான் அவன் வாழ்ந்த வாழ்க்கையின் பெறுமானம் பெரிதாக மதிப்பிடப்படுகின்றது. அந்த வகையில் இந்தத் துன்பகரமான நிகழ்ச்சியில் கலந்து கொண்ட எனக்கு அமரரின் பெறுமானம் சமுதாயத்திற்கு மிகப் பெரியதாய் உள்ளத்தை நான் உணர்கின்றேன்.

திரு. கணபதிப்பிள்ளை

உப அதிபர்,கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

❁❁❁❁❁

இந்த மண்ணுக்காக நல்ல சேவைகளை ஆற்றிவிட்டு ஐயா அவர்கள் அமரராகிவிட்டார். தானும் இந்த மண்ணுக்காகச் சேவையை ஆற்றியது மட்டுமல்லாமல் தமது பிள்ளைகளையும் சேவையாற்ற வழங்கியுள்ளார். அவர் ஆற்றிய சகல சேவைகளும் இந்த மண்ணின் மக்களின் மனதை நீங்காத இடத்தைப் பிடிக்கும்.

எழிலன்பன்,

பொறுப்பாளர்,தமிழீழ மாணவர் அமைப்பு

யாழ். மாவட்டம்.

❁❁❁❁❁

அமரர் அவர்கள் அன்பும் பண்பும் நிறைந்தவர். அத்தோடு தெய்வ பக்தி நிறைந்தவர். அவர் காட்டிய தெய்வீக ஒளி அவரது குடும்பத்தினருக்கு ஆசீர்வாதமாக அமையும். அவரது இழப்பு நேர் வழியும் தெய்வ சிந்தனையும் துணிவும் கொண்டவர்களுக்கு பேரிழப்பாகும்.

திரு. ச. சதாசிவம்

ஓய்வு பெற்ற அதிபர்.

❁❁❁❁❁



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் போன்ற சிற்பக்கலை வல்லுநர்களும் தெய்வ பக்தி உள்ளவர்களும் எதிர்காலத்தில் உருவாகவேண்டும். அதற்கு அமரர் அவர்களின் வாழ்க்கைச் சரிதம் நிச்சயம் வழிகாட்டும். அவரது வாழ்க்கை முறைகள் பற்றிய இன்றைய இரங்கல் உரைகள் எதிர்காலத்தில் மனித நேயம் மிக்கவர்களை உருவாக்கும் என நம்புகிறேன்.

திரு. வெ. நடராசா

அதிபர், அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியசாலை

❁❁❁❁❁

அமரர் அவர்களுடைய சமூகசேவையும் தெய்வீகப் பணியும் அரியாலைக் கிராமத்திற்கு மாத்திரம் உரியதல்ல. அது தமிழ் மக்கள் வாழ்கின்ற அனைத்துப் பிரதேசங்களுக் குமுரியது. அமரர் அவர்கள் சமுதாயத்துக்கு ஓர் உதாரண புருசராக வாழ்ந்து அவரது சேவையால் அவரது நாமத்தை வேர் ஊன்றிவிட்டுப் பிரிந்துள்ளார். அந்த நாமம் நிலைக்க அவரது வாரிசுகள் உழைப்பார்கள் என நம்புகிறேன்.

பேராசிரியர் கா. குகபாலன்

தலைவர், புவியியற்றுறை

யாழ். பல்கலைக்கழகம்.

❁❁❁❁❁

இறைவனுக்குத் தெய்வீகப்பணி செய்பவர்கள் இறைவ னுடன் இணைந்தவர்கள் ஆகின்றார்கள். மனித வாழ்வில் நிரந்தரமானது சிறப்பொன்றுதான். அமரர் அவர்கள் சீரிய வாழ்வு வாழ்ந்து இறைவனை அடைந்திருக்கிறார். அவரின் புனித ஆத்மா அவரது வழித்தோன்றல்களை நிட்சயம் நல்ல வழியில் இட்டுச் செல்லும்.

திரு. சு. பரமநாதன்

(தலைவர் யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் போன்ற கலைச்சிற்பிகள் எமது சமுதாயத்துக்குக் கிடைத்ததல்ல, முத்துக்கள் இலை மறை காயாய் இருந்து எமது சமூகத்துக்கு அவர் ஆற்றிய தொண்டுகள் என்றும் கலை எச்சங்களாக மிளிர்ந்துகொண்டிருக்கும். அவரது மறைவு இன்றும் தமிழர்களின் கலை விழுமியங்களைக் கட்டிக்காக்கும் உண்மைக் கலைஞர்களுக்குப் பேரிழப்பாகும்.

கலாபூசணம் செ. மெற்றாஸ்மெயில்
(நிர்வாக அதிகாரி,
வேலணை கல்வி வலயம்)

❁❁❁❁❁

அமரர் அவர்கள் ஒரு நல்ல குடும்பத்தைச் சார்ந்தவர். நல்ல மக்களைப் பெற்றெடுத்தவர். செய்யும் தொழிலே தெய்வம் என நினைத்தவர். தசிறந்த சிற்பாசிரியராக விளங்கியவர். எடுத்த கடமைகளை முடிப்பதில் உறுதியானவர். நல்லதோர் இலக்கை நோக்கிச் சென்றவர். தமிழர் சமுதாயத்திற்கு நல்லதோர் வழிகாட்டியாய் இருந்தவர். அவரது சகோதரர்களும் மூத்த மைத்தனும் ஆசிரியர்களாக இருந்து நல்லதோர் சமுதாயத்தை உருவாக்க உழைத்தவர்கள். உழைத்துக்கொண்டிருப்பவர்கள் என நான் உறுதியுடன் சொல்வேன். அவரது குடும்ப நண்பன் என்ற வகையில் அவரது இழப்பு என்னைப் பொறுத்தவரை ஓர் பேரிழப்பாகும். அவரது சிந்தனையில் நடத்தையில் உதித்த நற் பண்புகளை அவரது குடும்பத்தவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்பது முற்றிலும் உண்மையாகும். அவர் வாழ்ந்து காட்டிய உயர்ந்த வாழ்வு நம் எல்லோர்க்கும் வழிகாட்டியாக அமை யட்டும்.

கௌரவ மாவை. சேனாதிராஜா
யாழ் .மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவினர்களின் மனக்குமுறல்

**மனிதருள் மாணிக்கம் போன்ற எங்கள் குடும்பத் தலைவரான பெரிய அண்ணாவை இழந்தோம்.**

மனிதருள் பிறப்பதும் வாழ்வதும் இறப்பதும் இயற்கையாக இறைவனால் நடத்தப்படுகின்றது. பிறந்தவர்களுள் வாழ் வாங்கு வாழ்ந்து மனிதர்களினால் போற்றப்பட்டு, புகழோடு வாழ்வோர் சிலர். இப்படியான சில மனிதருள் முன்னணியில் வைத்து எண்ணக் கூடிய விஸ்வகர்ம குல திலகர் வல்லிபுரம் தம்பிப்பிள்ளை (பெரியண்ணா) சிற்பாச்சாரியார் ஆவார்.

எப்பொழுதும் இனிமையாக எல்லோருடனும் அன்பு காட்டி உபசரித்து மகிழ்வார். இறைபக்தி உள்ளவர். திருப்புகழ் பாடுவதில் மிகவும் வல்லமை உடையவர். அரியாலைப் பதியமர்ந்து அருள் ஒளிபரப்பும் சித்திவிநாயகப் பெருமானின் ஆலயச் சுற்றுப்பிரகாரக் கொட்டகை வேலைகள், தேர் வேலைகள், சப்பறம் செய்தல், தேர் முட்டி வேலைகள், வாகன வேலைகள் போன்ற நுட்பமான திருப்பணி வேலைகளைத் தன் சுய முயற்சியால் மிகவும் திறம்படச் செய்து தொழில் நுட்ப விற்பன்னர், சிற்பாச்சாரியார் என்னும் பட்டங்களைப் பெற்ற வராவார்.

அரியாலைப் பிரப்பங்குள மகாமாரி அம்பாள் ஆலய வேலைகள், கோபுரக் கதவு, வாகனம் போன்ற வேலைகளையும் மிகவும் சிறப்பாகச் செய்து பாராட்டும் பெற்றவர். சுழிபுரம் பத்திரகாளி அம்பாளுக்கு மணிக்கட்டடம் அமைத்து அதில் மணி ஏற்றி அடித்து அதன் ஓசை கேட்டு மகிழ்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் கந்தனின் உற்சவ காலத்தில் கந்தரனுபூதி பாடி அதனைக் கெஞ்சிரா இசையால் சிறப்பித்து மகிழ்ந்தவர். எமது சமூகத்தில் எவரும் அமைக்க முடியாத ஒரு யந்திர மர அரிவுத் தொழிற்சாலை அமைத்து அதன் மூலம் பல குடும்பங்கட்கு வேலை வழங்கி அவர்களை வாழவைத்தவர்.

சகோதரர்களாகிய நாங்கள் எல்லோரும் தாயை இழந்து கஷ்டப்பட்டபோது அவர் எங்கள் எல்லோரையும் அரவணைத்து அன்புகாட்டி வளர்த்துப் பாசமூட்டிய மூத்த அண்ணாவாவர்.

வயது தளர்ந்த இறுதி நேரத்தில் எங்கள் குலதெய்வமாகிய ஸ்ரீ ஞானவைரவப் பெருமானிடத்தில் பக்திகொண்டு அவருக்குத் திருப்பணித் தொண்டாற்றி மகிழ்ந்தவர். இப்படிப் பட்ட எங்கள் பெரியண்ணா திடீர் என வீழ்ந்து நோய் வாய்ப் பட்டுப் பிள்ளைகளின், பேரப்பிள்ளைகளின், சகோதரர்கள், மருமக்கள் முதலியவர்களின் சிறந்த பாரமரிப்பில் இருந்து இறைபதம்போய் அமரராகிவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**இளைய சகோதரர்**
**"சிவகீத அடியார்",**
**திரு. வ.நடராசா,**
**இளைப்பாறிய ஆசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் அண்ணா

அன்பின் அண்ணாவே திடீரென என்னை விட்டுப் பிரிந்து விட்டாய். சிறுபராயத்தில் நாம் பட்ட துன்பங்களை நினைத்துப் பார்க்கின்றேன். எங்கள் தாயாரையும் அதன் பின்பு எம்மை அரவணைத்த சிறிய தாயாரையும் இழந்தோம். எமது தந்தையாருக்கு வாழ்வின் நடுப்பகுதியில் ஏற்பட்ட மறக்க முடியாத பெரும் துன்பம் காரணமாக நாம் அனாதைகள் ஆகியதை மறக்க முடியுமா? இவ்வேளையில் அயலில் உள்ள அன்புள்ளம் கொண்டவர்கள் எங்களைத் தங்கள் பிள்ளைகள் போல் அரவணைத்து உணவளித்ததையும் ஆறுதல் தந்ததையும் கண்களில் கண்ணீர் சொரிய உன் ஆத்மாவுடன் சேர்ந்து நன்றியுடன் என் மனக் கண்ணால் பார்க்கின்றேன்.

குடும்பச் சுமை காரணமாகக் கல்விச் செல்வத்தை இழந்தோம். எனினும் நீ படிக்காத மேதை ஆகினாய். குலத்தொழிலில் நிகரற்றவனானாய். நீயும் நானும் சேர்ந்து வடிவமைத்த இல்லங்களும், ஆலயங்களின் கொட்டகைகளும் தேர்களும் சப்பரங்களும் சகடைகளும் இன்றும் உன்னைப்போல் நிமிர்ந்து இறுக்கமாய் இருக்கின்றன. என்னே உன் கை வண்ணம் அதற்கு நிகரேதும் இல்லை. இத்தனைக்கும் கலையில் ஆர்வம் கொண்டாயே அது எமது தந்தையாரிடமிருந்து நாம் பெற்றுக் கொண்டதல்லவா? பஞ்சபுராணங்களையும் மற்றும் தெய்வப் பாடல்களையும் மனப்பாடம் செய்து இசையோடு பாடுவதில் விற்பன்னன், காலத்தைவென்று நீ இன்று காவியமாகி விட்டாய்.

**என்றும் உன் நினைவுடன்**
**அன்புத் தம்பி**
**வ. கந்தையா (மணியம் மாஸ்டர்),**
**ஓய்வு பெற்ற போதனாசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரிந்தது கோபுரம்

கட்டிடத்தின் காவிய நாயகனே
பட்டி தொட்டியெல்லாம் உங்கள் கை வண்ணம்
சுட்டிக் காட்டி நிற்கின்றதையா
நாட்டில் நடந்த வன் செயலால்
தூர்ந்து போன பல கட்டிடத்தில்
நீட்டி நிமிர்ந்து நிற்கின்றது உங்கள் பதிவுகள்

தீட்டிய ஆயுதங்களால் நீங்கள் வடித்த
சிற்ப வேலைப்பாடுகள் அன்னியரால்
மூட்டிய தீயில் கூட எரிய மறுக்கின்றதே
ஆட்டம் கண்ட வயதினிலும்
நாட்டத்தோடு தொழில் செய்தீர்கள்
எட்டாத தூரத்தில் இருக்கும் நாம்
பட்டமரமாய் நிற்கின்றோம்
உங்களின் திடீர் மறைவால்.

**நோர்வே வாழ் அரியாலை மக்கள்**
**சார்பில் கு. தியாகலிங்கம் (அன்பு மகன்)**

❁❁❁❁❁

## எம்மை விட்டு எங்குதான் சென்றீர்

நாம் வரும் முன் நீங்கள் முந்தியது ஏனோ
நீங்கள் இவ்வுலகை விட்டு அகன்றாலும்
உங்கள் உருவம் எம்மை விட்டுப் போகாதே
ஓடோடிவந்து தொலைபேசியில் கதைத்திடுவீரே
உங்கள் பஞ்சு மடியில் நாம் அமர முடியவில்லை
நேரில் வந்து கொஞ்சிக் குழாவ ஏங்கியிருந்தோம்
எம்மை ஏமாற்றி விட்டு எங்கு தான் சென்றீர்.

**நோர்வே வாழ் பேரப்பிள்ளைகள்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமா நித்தம் நினைத்திருந்தோம்

மாமா மாமா என்று
மனம் நிறைய அழைத்து வந்தோம்
காலன் அவன் செவிகளிலே
அவ்வோசை பிடிக்கவில்லையா?
திடமாக இருந்த உங்கள்
உயிரை ஏன் கொண்டு சென்றான்
கோவிலும், குளமுமாய்
"பஜனை" பாடித் திரிந்த வாழ்க்கை
நீர்க்குமிழி ஆகுமென்று
சிறிதேனும் எண்ணவில்லை
வையத்துள் வாழ்வாங்கு
வள்ளுவன் வழியில் நின்றீர்
எண்ணிலாக் கைங்காரியம்
இறைவனுக்குச் செய்து நின்றீர்
அழுவதால் பயனில்லை
என்று மனம் தேறிவர
நீண்ட நாள் ஆகும் மாமா
நித்தம் நித்தம் நினைத்திருப்போம்

**மருமக்கள்**

**கவிதையாக்கம் : திருமதி கனகமணி சாம்பசிவம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகளின் கண்ணீர் ஆற்றுகை

அழகான மேனி இங்கு சரிவானது
அரியாலை எங்கும் கவலையானது

வழக்கமான உம் பேச்சு முடிவானது
வல்லிபுரத்தின் முகச்சாயம் இருளானது

நீர் சென்ற இடமெங்கும் திகழானது
பார் முழுதும் உம் பெயர் புகழானது

பேரப்பிள்ளைகளை இழந்து நீங்கள்
பேர் தெரியாமல் போனீரே

எக்காலமும் நாம் உம்மை மறவோம்
இன்னொரு பிறப்பு உம்மோடு பிறப்போம்.

**பிரிவால் துயருறும்**
**அரியாலை வாழ் பேரப்பிள்ளைகள்**

**கவிதையாக்கம் : ப.ஹரிகரன்**

## அப்பப்பா உன் நினைவுகள் அழிவதில்லை

அப்பப்பா என்று நிதம் அன்போடு அழைத்து வந்தேன்
தப்பேதும் செய்யவில்லை தலை மறைவாய்ப் போனதேனோ

கண்ணின் மணிபோல எமை என்றும் காத்திருந்தீர்
தண்ணீரில் குமிழி போல சட்டென்று மறைந்ததேனோ

உயிரைத்தான் பிரிந்து விட்டோம்
உம்நினைவைப் பிரிய வில்லை
ஊழி உள்ள காலம் வரை நினைவு அழிவதில்லை.

**பா. தர்சிகா (பபி)**
**கொழும்பு வாழ் பேர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி என்று காண்பேன்

நெடிதுயர்ந்த உருவமும், மிடுக்கான கம்பீர நடையும்....
தூய்மையான வெண்ணிற ஆடையும்...
வாய் நிறைந்து வாஞ்சையுடன் தம்பி என அழைத்து...
சிரித்துவரவேற்றும் பண்பும்....
அன்புடன் உமது மகளை எனது மனையாளாகத் தந்து
அருமையான வாழ்வமைத்துத் தந்த, அருமருந்தன்ன மாமா!
எமை ஆழாத் துயரில் ஆழ்த்தி விட்டு எங்கே சென்றீர்?

கடைசியாக ஒரு தடவை கனிவான உம் முகத்தைக்
காணக் கிடைக்காமல் கலங்கி அழுகின்றேன்

நோயென்று, நொடியென்று பாய்மீது படுக்காமல்...
கால் தடுக்கி விழுந்தீர் என ஒரு சாட்டு
காலனுக்கும் ஒரு காரணம் வேண்டுமன்றோ...
உமது இன்னுயிரைக் கவர்ந்து செல்ல.

இனிமேல் ஊருக்கு வந்து, அரியாலை வரும் போது...
சிரித்தபடி ஓடிவரும் உமதுருவம் காணாமல்....
வெறிச்சோடிக் கிடக்குமே. கனிவான சிரிப்புதிர்க்கும்...
களையான உம் முகத்தை இனி என்று காண்பேன்?
இனி என்று காண்பேன்?

**உமது பிரிவால் துயருறும் மருமகன்**

**இ. குணதாசன்**

**நோர்வே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஞ்சலிப் பா

நடமாடும் திருக்கோயில் ஒன்று
நடக்க மறந்ததேனோ

நல்லூரான் சந்நிதியில் கீதம் இசைத்த
நா..... பேச மறந்ததேனோ

கெஞ்சிராவில் நடம் புரிந்த விரல்கள்
இன்று வாழாதிருப்பதேனோ

சிற்பங்களுக்கு உயிர் கொடுத்தவரே
இன்று சிலையாகிப் போனதேனோ

அன்பு எனும் மந்திரத்தால்
அகிலத்தை வென்றவரே எமை
அழவைத்து விட்டு நீர் எங்கு சென்றீர் ஐயா...

மரத்திலே சிற்பம் கண்டீர் நீர் உம்
மனத்திலே உயர் பண்பைக் கண்டோம் நாம்

தனத்திலே சிறந்து விளங்கினாலும் உயர்
தானத்தை நீர் மறந்ததில்லை ஐயா

ஆலயம் செல்லும் போது அழைத்திடுவீர் என்னையுமே
"பவுண்ராசா" நான் "நடக்கிறேன்" கெதியாக வா.

நல்லூர் பஜனையினை எனை நாட வைத்த
உங்களை நான் மறப்பதற்கில்லை ஐயா.

கனத்த நெஞ்சங்களோடு கலங்கும் உள்ளங்களுக்கு
ஆறுதல் கூறி ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திக்கின்றேன்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கவிதையாக்கம்:
க.பவுண்ராசா
பிரபல கட்டிடக் கலைஞர்.

கலைமகள் வீதி
அரியாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய காண்பியக் கலை மரபின் மரபும் மாற்றமும், சில குறிப்புக்கள்

இந்தியப் பாரம்பரிய காண்பியக் கலைப் (Visual Art) பாரம்பரியத்தின் சுற்றுவட்டாரத்தில், கலையாக்கம், கலைப்பயில்வு என்பன வெல்லாம் அடிப்படையில் மரபுரிமை யாக, தந்தைக்குப் பின் மகன், பின் அவனது மகன் எனக் கைமாற்றப்படுகின்றவொரு பணிமுறையாகவே காணப்படு கிறது. இந்த மரபுரிமையென்பது இந்திய பண்பாட்டு வட்டகையில் சமூக அடுக்கு முறை - அதிகாரம் முதலிய வற்றுடன் நேர்த்தொடர்புடைய சாதி முறைமை சார்ந்தது. சாதி, சமூக உறுப்பினர்களை அவர்களின் பிறப்புவழி வகை பிரித்து, சமூக முதன்மையடிப்படையில் அடுக்கியதுடன், அவர்களிற்கான தொழில் அல்லது சேவை என்பதனையும் வரையறை செய்தது.

இவ்வகையில் பாரம்பரியக் காண்பியக் கலைப் பரப்பினுள் தொழிற்படும் அனைத்துப் படைப்பாளிகளையும் பொதுப் படையாக விஸ்வகர்ம குலத்தினரென அழைக்கும் வழக் குண்டு. அனைத்துச் சாதியினரையும்போல விஸ்வகர்ம குலமும் தமது சாதியுருவாக்கம், பரம்பரை தொடர்பாக ஐதிக நிலைப்பட்ட வரலாற்றினை உடையது. இதன்படி தேவசிற்பியும், முதலாவது கலைஞனுமாகிய விஸ்வகர்மாவே படைப்பாளிகளிற் கெல்லாம் படைப்பாளி எனவும், தாம் அவரது வழித்தோன்றல்கள் எனவும் அது எடுத்துக்கொள்ளும். படைப்புக் கடவுளான பிரம்மனே 'மகா விஸ்வகர்மா' எனக் கூறும் இம்மரபு, அவரது நான்கு திசை முகங்களிலிருந்தும் மனு, மயன், துஷ்ட்டா, விஸ்வகர்மா முதலான ஓவியம், சிற்பம், கட்டடம் ஆகிய காண்பியக் கலைகளிற்கான முதலாசிரியர்கள் தோன்றினார்கள் எனவும் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்வகர்மாவைக் குல முதல்வராகவும் கடவுளாகவும் ஏற்றுக் கொண்ட இக்காண்பியக் கலை மரபு அடிப்படையில் உயர்க்குழாம் சார்ந்த பாரம்பரியத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. பெருமளவிற்கு பெருமதங்கள் சார்ந்த பகைப்புல முடைய இம்மரபு அதன் கருத்துநிலை அடிப்படையை அதிகம் ஏற்றுக்கொண்ட ஒன்றுமாகும்.

அவர்களது மரபுவழியாகக் கைமாற்றப்படுகின்ற பாடப் பாரம்பரியம் (Textual tradition) என்பது மேற்படி கருத்து நிலை பகைப்புலத்தினால் அதிகபட்சம் வடிவமைக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகிறது. இந்தப் பாடங்கள் பொதுப் படையாகச் 'சில்ப சாஸ்திரங்கள்' என அழைக்கப்படுகின்றன. சில்ப சாஸ்திரங்கள் சார்ந்து மயனை முதன்மையாசாரியராகக் கொண்ட ஒரு தென்னிந்திய திராவிடப் பள்ளியும், விஸ்வகர்மாவை முதன்மையாசாரியராகக் கொண்ட வட இந்திய ஆரியப் பள்ளியும் இனங் காணப்பட்ட போதிலும் அவற்றிடையே தூக்கலாக ஒரு பொதுமையும் தென்படு கின்றது. அவ்வகையில் வட இந்திய, தென்னிந்தியப் பண்பாடு களின் கலப்பாலுருவாகிய பண் பாட்டுப் பரவுகையொன்றின் (Cultural fusion) குறிகாட்டியாகவும் மேற்படி சில்பசாஸ்திர நூல்களும் அதன் பாரம்பரியமும் காணப்படுகின்றன எனலாம்.

சில்ப சாஸ்திர நூல்கள் திருவுருவங்கள், கட்டடங்கள் முதலானவற்றை அமைப்பது தொடர்பான பல்வேறு விடயங்களை ஆரம்பம் முதல் இறுதி வரை அவற்றிற்கான சடங்குகள், சம்பிரதாயங்களின் பின்னணியில் எடுத்துரைக் கின்றன. ஊடகங்கள், ஊடகத் தெரிவுகள் முதல் திருவுருவ, கட்டட அமைப்பிற்கான அளவைப் பிரமாணங்கள், படைப் பாளி, படைக்கும் முறை வரை நுட்பமாகப் பேசுகின்ற அவை, அடிப்படையில், நியமங்களை (Norms) எடுத்துரைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களாக உள்ள அதே சமயம், படைப்பாளியின் ஆற்றல் வெளியீட்டிற்கான படைப்பாக்கச் சந்தர்ப்பங்களை வழங்கும் நூல்களாக வும் உள்ளன.

படைப்பாளிக்கு மிகவுயர்வானதொரு சமூக - சடங்கியல் முதன்மையை அளிக்கும் மேற்படி நூல்கள் படைப்பாளி என்பவன் ஒரு சாதகன் யோகி எனக் கூறுவதுடன் படைப்பாக் கச் செயற்பாட்டை ஒரு யோகமாகக் கருதுகின்றன. கலையாக் கத்தை இவ்வகையில் ஒரு ஆத்ம நிவேதனமாக எடுத்துக் கொள்ளும் மேற்படி சிந்தனைமரபு குறிப்பிட்ட வகையான பௌதீக உளவியல் நிலையினைப் படைப்பாளிகளிடம் வற்புறுத்துகிறது. புலனொடுக்கம், ஏகபத்தினி விரதம், பல்கலை அறிவு, பக்தி என்பவற்றுடன் பூனூல் அணிதல், உருத்திராக்கம், தர்ப்பைபுல் தரிப்பு என்பவற்றை ஒரு சில்பி யின் பொருட்டாக அவை எடுத்துக்காட்டியுள்ளன. சில்பி என்பவன் ஒரு 'மகாத்மா' எனச் சில்பரத்தினம் எனும் சில்ப நூல் எடுத்துக்கூறும்.

இம் மரபு, இவ்வகையில் கலைப்படைப்பென்பதைத் தியானத்தினூடாக சித்திரிக்கும் ஈட்டப்படுமொன்று என எடுத்துக்கொள்ளும். இந்தப் படைப்பாக்கத்திற்கான தியானத் தின் பொருட்டாக, தியான சுலோகங்கள் என்ற பெயரிலான உருவ நியமத்தை எடுத்துரைக்கும் சுலோகங்களை மேற்படி சாஸ்திர நூல்கள் கொண்டுள்ளன. எப்போதும் படைபடும் பொருளும் படைப்போனும் இருவேறு இயற்கைகள் என்ற இருமை எண்ணம் கரைந்து, இரண்டும் ஒருமைப்படுகிறதோ அக்கணமே படைப்பாக்கத்திற்கான உச்சக்கணமென இந் நூல்கள் எடுத்துக்கொள்கின்றன. பிருதஹாரண்யக உபநிட தத்தில் வரும் ஒரு வாசகம் மேற்படி மனநிலையை படைப் பாக்க உச்சக்கணத்தைச் சுட்டுதற்குத்தக்க உதாரணமாக அமைந்துள்ளது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாரொருவன் தன்னை ஒன்றாகவும், தான் வழிபடும்
தேவதையை இன்னொன்றாகவும் அறிகின்றானோ
அவன் அறிவது ஒன்றுமில்லை".

பிராமண மேலாதிக்கத்தை வர்ணகோட்பாட்டினடியாக முன்னுறுத்தும் பாரம்பரிய இந்திய சமூக அடுக்குமுறையில் பாரம்பரிய காண்பியக்கலை சார்ந்த படைப்பாளிகள், அவர்களது தெய்வ வாழிடம் , உருவமைப்பு முதலான செயல்களினூடாகப் பெறும் சடங்கியல் சார்ந்த முக்கியத்துவமூடாகச் சிலவேளைகளில் பிராமணருக்குச் சமதையாகவும் கணிப்புப் பெறும் சந்தர்ப்பங்கள் உண்டு. உண்மையில் விஸ்வகர்ம குலம் கட்டுப்பாடற்ற சாதி (Unbound Caste) முறைமை சார்ந்தது. அது சமூக அடுக்குதலில் மேலேயுள்ள எந்தவொரு சாதியாலும் நேரடி யாகக் கட்டுப்படுத்தப்படாதது என்ற வகையில் அதன் சமூக வரிபாகம் காணப்பட்டது.

இந்தியப் பண்பாட்டுப் பெருவட்டாரத்தில் பேரளவு சமூக மாற்றத்திற்கான நிர்பந்தங்களைக் காலனிய ஆட்சி உருவாக்கியது. பௌதீக மாற்றங்களை மட்டுமல்லாமல் உளவியல் ரீதியாகவும் இந்த மாற்றங்கள் நடந்தேறின என்பர். அம்மாற்றம் பாரம்பரிய காண்பியக் கலைப் பயில்வு தொடர்பான கண்ணோட்டம், நடைமுறை ஆகியவற்றிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. மேற்கைப் போல நிலமானியச் சமூகம் உடைந்து, உருவாகிய மத்தியதர வர்க்க, முதலாளித்துவ முதன்மையுடைய மாற்றம் இங்கு நடைபெறவில்லை. இங்கு சமாந்தரமாக நிலமானிய முறையும், மத்தியதர வர்க்கத்தின் புதிய வாழ்முறையும் நிலவலாயின. இந்த நிலவுதல் ஒரு சமூக யதார்த்தமாகவும், பேரரசின் நிலைபேற்றுக்கு உதவுமொன்றாகவும் இருந்தது. இதனால் மரபு, நவீனம் என்பன சமாந்தரமாக வாழத்தொடங்கின. ஒரு வகையான இரட்டைப் பண்பாடும் உருவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக, பிரித்தானிய காலனிய ஆட்சியினூடாகக் கலை பற்றிய, இன்று வரைக்கும் வெகுசன மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் புதிய வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டன. இந்தக் காலனிய காலக் கலை, கண்ணோட்டம், அக்டமிக் யதார்த்தவாதம் ( Academic realism) எனப்படும் யதார்த்தத் தன்மையும் பார்வைப்புல மாயையும் நிரம்பியதான அப் போதைய விக்டோரிய காண்பியக் கலைப் போக்கையே உயர் கலை (High art) என வரையறை செய்ததன் ஊடாகப் பாரம்பரியக் காண்பியக் கலைமரபினைப் பின் தள்ளியது. இந்த அக்கடமிக் யாதார்த்தவாத உயர்கலை பயிற்சியை மேற்கொள்பவர்களையே காலனிய காலக் கண்ணோட்டம் கலைஞர்ப் படைப்பாளிகள் (Artists) எனக் கூறியதுடன், பாரம்பரிய காண்பியக் கலைசார் கலைஞர்கள் என்போர் அத்தகைய தகுதிக்கு உரியவர்கள் அல்ல எனவும் அவர்கள் கைவினைஞர்கள் (Artisans) எனவும் வரையறுத்தது. இதன் மூலம் கலையின் உயர் பாரம்பரியமென்பது அக்கடமிக் யாதார்த்தமே என்ற நிலைப்பாட்டைத் தாபித்தது. அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கலைக்கல்லூரிகளும் ( Art colleges) இதனை விஸ்தரிப்பதிலும், தாவிப்பதிலும், வெகுஜனதளத்தில் நிலை நாட்டவும் பெருமளவுக்கு உதவியுள்ளன. இதன் மூலம் பாரம்பரியக் கலைபயில்வு, கலைஞர்கள் என்போர் ஒரு வகையான இரண்டாம் நிலைக்குத் தமது சமூகத்திற்கு உள்ளாகவே தள்ளப்பட்டனர் என்ற போதிலும் மரபு முற்றாக முறிவடையாமையும், சமய ரீதியான உருவமைப்பு, கட்டடம் என்பதில் அவர்களுக்குத் தரப்பட்ட இடமும் மேற்படி நிலைக்குள்ளும் அவர்களது பயில்வைத்தக்க வைத்தன. அது ஒரு கோயில் சார்ந்த பயிற்சி மட்டுத்தான். வீட்டுக் கட்டு மானம் முதலியவற்றில் இருந்த அவர்களது பங்கு முதலியன பின்தள்ளப்படலாயின. அதேநேரம் இத்தொழில் சார்ந்திருந்த சமூகப் பெருமையும் காலனிய வெள்ளாடைத் தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகத்தின் பின்புலத்தில் அதன் சமூக அங்கத்தினரிடையே தாழ்வுச் சிக்கலையும் ஓரளவுக்குத் தோன்றுவிக்கவே செய்தன. இத்தகைய நிலைமைகள் தொடர்ச்சியாக இவற்றின் பயில் வதில் தாக்கத்தைச் செலுத்தலாயின.

தலைமைப் படைப்பாளி ஒருவனின்கீழ் குழுநிலையில், தமக்கான அடுக்குமுறை, தொழிற்பகுப்பு என்பவற்றுடன் காணப்படும் இத்துறைசார் பயில்வின் குழுநிலையென்பது அடிப்படையில் சாதியடிப்படையானது. குறிப்பிட்ட சாதி யினர் மட்டுமே அக்குழுவினுள் அடங்கும் இம்மரபு கால அசைவில் மாற்றத்திற்கு உள்ளாகிறது. போஷிப்பு, கல்வி, சாதி முதலியன பற்றிய பல்வேறு கண்ணோட்டங்கள் ஏற்படுத்தும் கருத்து ரீதியானதும் நடைமுறை நிலைமைகள் சார்ந்த பின்னணியிலும் இம்மாற்றம் நடக்கின்றதெனச் சுருக்கமாகக் கூறமுடியும். அவ்வகையில் குறிப்பிட்ட சாதி, குல மரபினுள் வராதவர்கள் குழு அங்கத்தவராதல், சிலவேளை முழு அளவில் பாரம்பரியக் கலையின் சில வடிவங்களை வேறு சாதியினர் கையேற்றல் முதலான மாற்றங்கள் நடந்தேறியுள்ளன. சாதியை அடிப்படையாக கொண்ட இம்மரபில் இவ்வகையில் ஏற்படும் மாற்றம் என்பது மிகவும் கணிப்பிற்கரிய ஒன்று. இதன் பகைப் புலத்தில் அதன் சடங்குகள், பயில்வுகளில் பல மாற்றங்கள் நடந்தேறுகின்றன.

கலை, கலைஞர் என்பவர்களது சமூக வகிபாகம் முதலியவற்றின் அடிப்படையில் சமூகத்தின் உற்பத்திமுறை, கருத்துநிலை ஆகியவற்றின் பகைப்புலங்கள் ஆழப்படுவதும், தீர்மானிக்கப் படுவதுமான ஒன்றாக இருப்பதை இந்த வரலாற்று மாற்றம் சுட்டி நிற்கிறது எனக் கூற முடியும்.

**பாக்கியநாதன் அகிலன்**
**விரிவுரையாளர்**
**யாழ் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர வலயம்

- பூமியின் வடமுனையிலிருந்து, தென்முனைவு ஊடாகச் செல்லும் பெருவட்டத்தின் வடமுனையிலிருந்து தென் முனைவு வரையான அரைவட்டப் பகுதி நெடுங்கோடு அல்லது நெட்டாங்கு எனப்படும்.

- நெடுங்கோடுகளைச் செங்குத்தாக வெட்டிச் செல்லும் பெருவட்டம் பூமத்தியக் கோடு எனப்படும்.

- பூமத்தியக்கோடு அமைந்துள்ள தளத்திற்குச் சமாந்தரமான வட்டங்களை அகலக்கோடுகள் அல்லது அகலாங்குகள் எனப்படும். (மேலுள்ளவைகள் கற்பனைக் கோடுகளாகும்)

- பூமியானது மேற்கிலிருந்து, கிழக்கிற்குத் தன்னைத்தானே சுற்றுவதோடு, சூரியனையும், மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றுகின்றது.

- பூமி தன்னைத்தானே சுழலுவதால் இரவு, பகல் உண்டா கின்றது.

- நெடுங்கோடுகளில் முதன்மை நெடுங்கோடாக இங்கிலாத் தின் கிறீன்விச் நகரத்தினூடாகச் செல்லும் நெடுங்கோடே கருதப்படுகின்றது. இது $0^0$ நெடுங்கோடு ஆகும். இதனையே கிறீன்விச் கோடு என அழைக்கின்றோம்

- பூமி தன்னைத்தானே ஒரு முறை சுழல எடுக்கும் காலம் 24 மணித்தியாலம் ஆகும். ஆகவே ஒரு மணித்தியாலத்தில் பூமி சுழலும் அளவு $15^0$ ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


❁ பூமி தன்னைத்தானே $1^0$ யினூடாக சுழல எடுக்கும் காலம்

$$= \frac{24 X 60^0}{360^0}$$

$= 4$ நிமிடம்

❁ ஒரு குறிப்பிட்ட நெடுங்கோட்டின் வழியே உள்ள இடங்களில் ஒரே நேரமே காணப்படும்.

❁ ஒவ்வொரு பாகையால் வேறுபடும் நெடுங்கோடுகளைக் கருதும்போது குறிப்பிட்ட நெடுங்கோட்டின் கிழக்குப் பக்கமாக அடுத்து வரும் ஒவ்வொரு நெடுங்கோட்டின் வழியே உள்ள நேரம் 4நிமிடங்களால் கூடுவதோடு மேற்குப் பக்கமாக அடுத்து வரும் ஒவ்வொரு நெடுங்கோட்டின் வழியே உள்ள நேரம் 4 நிமிடங்களால் குறையும்.




❁ கிறின்வீச் கோட்டை ஆரம்பமாகக் கொண்டு, கிழக்கு நோக்கியோ அல்லது மேற்கு நோக்கியோ காணப்படும் ஒரு நகரம் எந்த நெடுங்கோட்டின் மீது காணப்படுகின்றதோ அந்த நெடுங்கோட்டின் பெறுமானத்திற்கு ஏற்பவே அக்குறிப்பிட்ட நகரின் இடத்திற்குரிய நேரம் கணிக்கப்படுகிறது.

உதாரணம்:

1. கிறீன்விச் நகரின் நேரம் ஜனவரி 05ம் திகதி காலை 6.00 மணி எனின், கிறீன்விச் நகரிலிருந்து கிழக்கு நோக்கி $95^0$ நெடுங்கோட்டில் அமையும் A எனும் நகரின் இடத்துக்குரிய நேரத்தைக் கணிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுங்கோடுகளில் $15^0 \Rightarrow 1$ மணித்தியாலம்

நெடுங்கோடுகளின் $95^0 \Rightarrow \frac{95}{15}$ மணித்தியாலம்

$= 6\frac{5}{15}$ மணித்தியாலம்

= 6 மணித்தியாலம் 20 நிமிடம்

ஆகவே கிறீன்விச் நேரம் 05ஆம் திகதி காலை 6 மணி ஆகும் போது A நகரின் நேரம் ஜனவரி 05ம் திகதி பிற்பகல் 12 மணி 20 நிமிடம் ஆகும்.

2. கிறீன்விச் நகரிலிருந்து மேற்கு நோக்கி $95^0$ நெடுங் கோட்டில் அமையும் B எனும் நகரின் நேரத்தைக் கணிக்க. கிறீன்விச் நேரம் ஜனவரி 05ம் திகதி காலை 6 மணி ஆகும் போது A நகரின் நேரம், 6 மணி 20 நிமிடத்தால் குறையவேண்டும்.

ஆகவே B நகரின் நேரம் = ஜனவரி ,4ஆம் திகதி பிற்பகல் (இரவு) 11 மணி 40 நிமிடம்.

- ஒரே நாட்டிற்குள்ளோ, பெரிய நிலப்பரப்பைக் கொண்ட நகரிற்குள்ளோ இந்த நெடுங்கோடுகளிற்கு ஏற்ப நேரங் களைக் கணிக்கும் போது நேரங்கள் வித்தியாசப்படும்.

- உதாரணமாக இலங்கையின் கொழும்பு நகரமானது கிழக்கு நெட்டாங்கு $79^0$ இல் அமைந்துள்ளது. மட்டக்களப்பு நகர மானது கிழக்கு $81^0$ இல் அமைந்துள்ளது. இதற்கு ஏற்ப அவ் விரு நகரங்களுக்குமிடையில் இடத்திற்குரிய நேரம் $2^0$ ஆல் வித்தியாசப்படுகின்றது. இதன் காரணமாக நடைமுறைப் பிரச்சினைகள் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❁ மேலே குறிப்பிட்ட நடைமுறைப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்காக உலகம் முழுவதும் நேர வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிறீன்விச் கோட்டை தொடக்கக் கோடாகக் கொண்டு ($0^0$ கோடு), 1 மணித்தியாலத்தால் வேறுபடக் கூடியதாக $15^0$, $30^0$, $45^0$, $60^0$ என நெடுங்கோடுகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறான ஒவ்வொரு நெடுங்கோட்டின் இரு பங்கங்களிலும் $7^1/_2{}^0$ வரை வியாபித்துள்ள ($15^0$ கொண்ட) பிரதேசம் ஒரு நேர வலயம் எனப்படுகின்றது. ஒரு நேர வலயத்தின் மத்தியில் அமைந்துள்ள நெடுங்கோட்டின் நேரமே அந்த வலயத்தில் அமைந்துள்ள பிரதேசத்தின் நேரமாகக் கொள்ளப்படுகின்றது.

$0^0$ நெடுங்கோடான கிறீன்விச் கோட்டை அடிப்படையாகக் கொண்ட நேர வலயம் 0 நேர வலயமாகக் கொண்டு கிழக்கு நோக்கிச் செல்லும் வகையில் 0, 1, 2, 5,...., 23 என்ற இலக்கங்கள் கொண்டதாக நேர வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❁ கிறீன்விச் கோட்டிலிருந்து கிழக்கு நோக்கி $80^0$ நெடுங்கோட்டில் கொழும்பு நகரம் அமைந்துள்ளது. அதற்கேற்ப கிறீன்விச் நகரில் 2004 ஏப்ரல் 5ஆம் திகதி நண்பகல் 12.00 மணியாகும் போது

i. கொழும்பின் இடத்துக்குரிய நேரத்தைக் காண்க.

ii. இலங்கையின் நியம நேரத்தைக் காண்க.

$15^0 \Rightarrow$ 1 மணித்தியாலம்

$80^0 \Rightarrow \frac{80^0}{15}$ மணி = $5\frac{1}{3}$ மணி = 5 மணி 20 நிமிடம்

iii. கொழும்பில் இடத்துக்குரிய நேரம்

= 12.00 மணி + 5 மணி 20 நிமிடம்

= 17 மணி 20 நிமிடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. இலங்கை 0 நேர வலயத்திலிருந்து கிழக்குப் பக்கமாக $90^{0}$ நெடுங்கோட்டை அடிப்படையாகக் கொண்ட நேர வலயத்தில் அதாவது 6ஆவது நேர வலயத்தில் அமைந்துள்ளது. எனவே இலங்கையில் நேரம் கிறீன்விச் நேரத்திலும் பார்க்க 6 மணித்தியாலங்கள் அதிகமாகும் அதற்கேற்ப இலங்கையின் நேரம்

= 12.00 மணி + 6 மணி = 18 மணி

இலங்கையில் நேரம் = 2004 ஏப்ரல் பிற்பகல் 6 மணி ஆகும்.

☸ கிறின்விச் கோட்டை ஆரம்பமாகக்கொண்ட 0நேர வலயம் தொடர்பாக (முழு பூகோளத்தையும் கருத்திற் கொண்டால்) இடஞ்சுழியாக (கிழக்கில்) +1, +2, .... + 12 என்றவாறும், வலஞ்சுழியாக (மேற்கில்) -1, -2, .... -12 என்ற வாறும், நேர வலயங்கள் வேறாக்கப்பட்டுள்ளன. இங்கு +12, -12 என்பன ஒரே நேர வலயத்தையே குறிப்பிடுவதைக் கவனத்திற் கொள்க

☸ +12, -12 எனக் குறித்துள்ள நேரவலயத்தின் நடுவில் அமைந்த $180^{0}$ கொண்ட நெடுங்கோடானது சர்வதேச திகதிக்கோடு எனப்படுகின்றது. அதன் வலப்பக்கத்தில் அமைந்துள்ள $7^{1}/_{2}^{0}$ பகுதி -12 என்ற நேரவலயப் பகுதியாகவும், அதன் இடது பக்கத்தில் அமைந்துள்ள $7^{1}/_{2}^{0}$ பகுதி +12 என்ற நேரவலயப் பகுதியாகவும் கொள்ளப்படுகின்றது. இவ்விரு நேரவலயப் பகுதிகளிலும் நேரம் ஒன்றே எனினும், +12 என்ற பகுதி யிலும் பார்க்க -12 என்ற பகுதியில் ஒருநாள் குறைவாகும். அதாவது + 12 இல் திங்கள் எனின் 12 இல் ஞாயிறு ஆகும். திகதியைக் கருதுவோமாயின் +12 இல் குறிப்பிட்ட மாதத்தின் 5ம் திகதி எனின், 12 என்ற பகுதியில் அம் மாதத்தின் 4ஆம் திகதி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகின் முதன்மைகள்

பெண்ஜனாதிபதி : மரியா எலிஸா

தபால்தலை : பென்னி பிளாக்

நடமாடும் தபால் நிலையம் அமைக்கப்பட்டது:
இங்கிலாந்து

மருத்துவமனைகள் அமைக்கப்பட்டது :
ரோம் (இந்தியா)

உலகப் படத்தை வரைந்தவர் :
கிரேக்கரான இராபேஸ்தனிஸ்

எட்டு மணி நேர வேலை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது
அமெரிக்கா

தொலைபேசி அமைக்கப்பட்டது:
1878 இல் பெஸ்ரீன் நகரில்

துப்பறியும் படம் : லாரா திரைப்படம் 1944

மனிதனால் கண்டறியப்பட்ட உலோகம் : செம்பு

எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தவர்கள்:
எட்மன்ட் ஹிலாறி, நார்கே டென்ஸிங்

வீடுகளுக்கு இயக்கம் இடும் முறை ஏற்படுத்தப்பட்டது
1993 பாரிஸ் நகரில்

தேர்தல் நடாத்திய நாடு : கிரேக்கம் (கிறீஸ்)

ஒய்வூதியம் வழங்கும் முறையை அறிமுகப்படுத்தியவர்:
பிஸ்மராக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகைச் சுற்றி வந்த கப்பல் : விக்ரோறியா

மின்சார ரயிலை அறிமுகம் செய்த நாடு : அமெரிக்கா

தொலைக்காட்சியில் விளம்பர நிகழ்ச்சிகள் அறிமுகமானது:
அமெரிக்க தொலைக்காட்டியில் 1941.07.01
(பிராக்டர் அன்ட் காம்பின் நிறுவனம்)

ரயில் விபத்து : 1830.09.15 இங்கிலாந்தில்

விலங்குகள் காட்சியகம் அமைக்கப்பட்டது:
1793 இல் பரிஸில்

ஏவுகணையை ஏவிய நாடு : ஜப்பான்

செயற்கைக் கோள் : ஸ்புட்னிக்

விண்வெளி வீரர் : யூரி அசாரின் (ரஷ்யா)

விண்வெளி வீராங்கனை : அலன்றினா ரெரஸ்கோவ்

உலகத்தைச் சுற்றியவர் : மகலன்

மக்கள் தொகையில் முதலிடம் வகிப்பது : சீனா

பணக்காரரர் : பில்கேட்ஸ்

விண்வெளிக்கு சென்ற சுற்றுலாப் பயணி : மெனிஸ்றீப்போ

சந்திரனில் இறங்கியவர் : நீல் ஆம்ஸ்ரோங்

வடதுருவத்தை அடைந்தவர் : றொபேட் பியர்

தென்துருவத்தை அடைந்தவர் : அமண்ட்ஸன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்வெளி நிலையம் : அல்யுட் 1

தேசியக் கொடி அறிமுகப்படுத்தப்பட்டது : டென்மார்க் (1242)

தொலைக்காட்சி ஒலி, ஒளி பரப்பு இடம்பெற்றது:
இங்கிலாந்து (1932)

தோன்றிய உயிரினம் : அமீபா

உலககிண்ணக் கிரிக்கட் போட்டிகள் : இங்கிலாந்து 1975இல்

உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள்:
1930 இல் உருகுவே

நவீன ஒலிம்பிக் போட்டிகள் : கிரேக்கம் 1896

பெண் தாதி : புரோறன்ஸ் நைற்றிசிகேஸ்

சோதனைக் குழாய்க் குழந்தை :
1978 இல் இங்கிலாந்து (லூயி பிரவுண்)

இதய மாற்றுச் சிகிச்சை மேற்கொண்டவர் :
கிறிஸ்ரியல் பேனாட்

குளோரிங் முதலாவது உயிரினம் : மொலி (செம்மறி ஆடு)

**பேசும் சினிமாப் படம்**

தமிழில் வெளியான பேசும் சினிமாப்படம் : காளிதாஸ்

கார்டூன் (கேலிச்சித்திர) திரைப்படம்: பிரான்ஸ்

நுணுக்குக்காட்டியில் கலங்களை அவதானித்தவர்:
றொபேட் குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபாலட்டையை வெளியிடும் நாடு : ஒஸ்ரியா

முத்திரை வெளியிடப்பட்ட நாடு : ஐக்கிய இராச்சியம் 1840

நோபால் பரிசு பெற்ற முதல் தமிழர் : ராமன்

நோபல் பரிசு பெற்ற முதல் பெண் : மேரி கியூரி

எலக்ரோனிக் கணினி : எலியாக்

## ஒலிம்பிக்

◈ உலகின் அனைத்து நாடுகளையும் உள்ளடக்கிய நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பழமையும், மதிப்பும் மிக்க விளையாட்டு இதுவாகும்.

◈ கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்தில் இருந்தே (கி.மு 776) கிறீஸ் ஒலிம்பியா பள்ளத்தாக்கில் விளையாட்டு நடந்தது.

◈ *1894* : சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அமைக்கப் பட்டது.

◈ *1896* : பிரான்ஸ் நாட்டவரான பியரே கூபர்பீனால் நவீன ஒலிம்பிக் போட்டிகள் கிரேக்கத்தில் ஆரம்பம்.

◈ *1920* : ஒலிம்பிக் கொடியேற்று வழக்கம் ஆரம்பமானது.

◈ *1928* : ஒலிம்பிக் போட்டிகளில் பெண்கள் பங்கு பற்ற அனுமதிக்கப்பட்டனர். ஒலிம்பின் தீபம் ஏற்றும் வழக்கம் ஆரம்பம்.

◈ *1932* : ஒலிம்பிக் கிராமம் அமைக்கும் முறை உருவானது.

◈ *1936* : ஒலிம்பிக் போட்டிகள் தொலைக்காட்சி மூலம் ஒலிபரப்பானது.

◈ *1996* : ஒலிம்பிக் நூற்றாண்டு விழாப் போட்டிகள் நடைபெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ 2000 : ஒலிம்பிக் தீபம் நீருக்கு அடியால் கொண்டு செல்லப்பட்டு ஏற்றப்பட்டது. சுதந்திகா ஜயசிங்காவில் வெள்ளிப்பதக்கம் பெறப்பட்டது.

◈ 2004 : ஒலிம்பிக்கில் முதல் தடவை மல்யுத்தப் போட்டிகள் இடம்பெற்றன.

◈ 2008 : சீனாவின் பீஜிங்கில் நடைபெற உள்ளது.

◈ குறிக்கோள் :

போட்டிகளில் வெற்றி பெறுவதல்ல பங்கேற்பதுதான். அதாவது போட்டியிட்டு வெற்றி பெறவேண்டும் என்பதல்ல பங்கேற்றுச் சிறப்பாக செயற்படவேண்டும் என்பதே.

◈ கோட்பாடு : விரைவு, உயர்வு, துணிவு

◈ சின்னம் : ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் நகரைப் பொறுத்துத் தெரிவு செய்யப்படுகிறது.

◈ உறுதிமொழி :

ஒலிம்பிக் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு உண்மையான விளையாட்டு உணர்வுடன் நடந்துகொள்வேன். விளையாட்டின் பெருமையைக் காப்பதாகவும் நான் சார்ந்த அணியைப் பெருமைப்படுத்துவதாகவும் எனது செயற்பாடுகள் அமையும்.

◈ ஒலிம்பிக் : ஒரு ஒலிம்பிக் போட்டி தொடங்கிய ஆண்டிலிருந்து அடுத்த ஒலிம்பிக் போட்டி ஆரம்பிக்கும் வரையிலான நான்காண்டுக் காலப்பகுதி.

◈ ஒலிம்பிக் வளையம் : சிவப்பு, மஞ்சள், பச்சை, கறுப்பு, நீலம் ஆகிய ஐந்து வர்ணங்களிலான ஐந்து வளையக்கல் ஐந்து குறிப்பதுடன் அவை ஒற்றுமையுடன் பற்கேற்பதைக் குறிக்கவே ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தினங்கள்

| | | |
|---|---|---|
| தை | 12 | இளைஞர் தினம் |
| மாசி | 14 | காதலர் தினம் |
| | 17 | நோயாளர் தினம் |
| | 22 | சாரணியர் தினம் |
| பங்குனி | 08 | மகளிர் தினம் |
| | 11 | பொதுநலவாய தினம் |
| | 13 | சிக்கன தினம் |
| | 15 | ஊனமுற்றோர் தினம் |
| | 22 | குடிநீர் தினம் |
| | 23 | வளிமண்டல தினம் |
| | 27 | நாடக தினம் |
| சித்திரை | 01 | முட்டாள் தினம் |
| | 07 | சுகாதார தினம் |
| | 12 | தாதிகள் விண்வெளி தினம் |
| | 22 | பூமிப் பாதுகாப்புத் தினம் |
| | 23 | புத்தகத் தினம் |
| வைகாசி | 01 | தொழிலாளர் தினம் |
| | 03 | பத்திரிகை சுதந்திரத் தினம் |
| | 08 | நூதனசாலை செஞ்சிலுவைத் தினம் |
| | ~~14~~ 09 | அன்னையர் தினம் |
| | 15 | குடும்பநல தினம் |
| | 17 | தகவல் தொடர்பு தினம் |
| | 21 | கலாசார பண்பாட்டுத் தினம் |
| | 31 | புகைத்தல் மறுப்புத் தினம் |
| ஆனி | 05 | சுற்றுச் சூழல் தினம் |
| | 07 | தொல் பொருளியலாளர் தினம் |
| | 23 | ஒலிம்பிக் தினம் |
| | 26 | போதைப்பொருள் எதிர்ப்புத் தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஆடி | 07 | கூட்டுறவாளர் தினம் |
| | 11 | சனத்தொகை த் தினம் |
| | 17 | வறுமை ஒழிப்புத் தினம் |
| | 26 | சித்திரவதை எதிர்ப்புத் தினம் |
| ஆவணி | 06 | சமாதானத் தினம் |
| | 29 | விளையாட்டுத் தினம் |
| புரட்டாதி | 08 | எழுத்தறிவுத் தினம் |
| | 16 | ஓசோன் தினம் |
| | 25 | செவிப்புலனற்றோர் தினம் |
| | 27 | சுற்றுலா த் தினம் |
| ஐப்பசி | 01 | முதியோர் தினம் |
| | 03 | மது ஒழிப்புத் தினம் |
| | 05 | சிறுமிகள் தினம் |
| | 06 | ஆசிரியர் தினம் |
| | 09 | அஞ்சல் தினம் |
| | 10 | உளச்சுகாதாரத் தினம் |
| | 15 | வெள்ளைப் பிரம்புத் தினம் |
| | 16 | உணவு தினம் |
| | 21 | விவசாய தினம் |
| | 24 | ஐக்கிய நாடுகள் தினம் |
| | 30 | சேமிப்பு த் தினம் |
| கார்த்திகை | 20 | சிறுவர் உரிமைகள் தினம் |
| | 21 | கடற்றொழில் தினம் |
| மார்கழி | 01 | எயிட்ஸ் தினம் |
| | 02 | வலது குறைந்தோர் தினம் |
| | 10 | மனித உரிமைகள் தினம் |
| | 13 | சிறுவர் ஒலிபரப்புத் தினம் |

**தொகுத்தவர் : உமாசங்கர்**

**அரியாலை சயன்ஸ் அக்கடமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எங்கள் குடும்பத் தலைவருக்கு எதிர்பாராத விதமாகச் சிரசில் காயம் ஏற்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையிலும், நாயன்மார்கட்டு உடல் உள இயன் வைத்தியசாலையிலும் அவர் அநுமதிக்கப்பட்டிருந்த போது அவரது நோயைத் தீர்ப்பதற்காக அயராது உழைத்த வைத்திய கலாநிதி களுக்கும், உதவி வைத்தியர்களுக்கும், ஊழியர்களுக்கும் முதலில் எமது மனமார்ந்த நன்றிகள்.

07.10.2004 இல் அன்னார் இறையடி சேர்ந்தகாலை உடன் வருகை தந்து எமது துயரத்தில் கலந்ததோடு சரீர உதவிகளைச் செய்துதந்த சுற்றத்தார்கள், அயலவர்கள், நண்பர்களுக்கும்,

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற 09.10.2004 இல் பெருந்திரளாகக் கலந்துகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும்,

இறுதிக் கிரியைக்கு முன்னரும் அதற்குப் பின்னரும் நேரடியாக வருகை தந்து எமது துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும்,

இறுதிக் கிரியைக்கு வருகை தரமுடியாமல் தொலைபேசி, தொலைநகல், கடிதம், தந்தி மூலம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்து அனுதாபங்களைத் தெரிவித்தவர் களுக்கும்,

இறுதிக் கிரியைத் தினத்தன்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், இதய அஞ்சலி துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டோ ருக்கும், பத்திரிகையில் இரங்கல் செய்திகளை வெளியிட்டோருக்கும்,

இரங்கல் அஞ்சலித் உரைகளை நிகழ்த்தியோருக்கும், இறுதிக் கிரியைக ளின் போது கீர்த்தனைகளைப் பாடியோர்களுக்கும்

இன்று அன்னாரின் நினைவாக வெளிவரும் பிள்ளையமுதம் நூலை அணி செய்தோருக்கும், திரண்டு இருக்கும் உங்கள் அனைவருக் கும் எமது மனமார்ந்த நன்றி.

40/2, கலைமகள் வீதி,
அரியாலை.
06.11.2004

பிள்ளைகள், சகோதரர்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Smart Graphics

அரியாலை அபிவிருத்திச் சங்கம்
அரியாலையின் மூத்த பிரஜையாக
அமரர் வ.தம்பிப்பிள்ளை அவர்களைக் கௌரவித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org